விழா மலர்கள், சஞ்சிகைகள், நினைவு மலர்கள், கல்வெட்டுக்கள், அஞ்சலிகள் அனைத்தும் குறைந்த விலையில் குறுகிய கால எல்லைக்குள்...
உங்கள் சகல அச்சுத் தேவைகளுக்கும்... Tel:416.284.9545
1345 Morningside ave #8, Scarborough

இருளிலிருந்து ஒளிக்கு...
# பூபாளம்
www.boobalam.com

Dental Clinic
Dr. Iru VIJAYANATHAN
BDS, MFDS, FAGD,
General Dental Practitioner
3150 Eglinton Ave East Scarborough (Markham & Eglinton)
3351 Markham Road # 129 Scarborough (Markham & Steeles)
416.264.3232 | 416.609.2022

30 கார்த்திகை 2012 | 10,000 பிரதிகள் | இதழ் 13

## மாணவர்களின் வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டம்...

# யாழ்.பல்கலைக்கழகம் ஸ்தம்பிதம்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இன்றிலிருந்து இரண்டு நாளைக்கான வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டத்தினை ஆரம்பித்திருக்கிறார்கள். மாவீரர் தின நிகழ்வுகளை ஒட்டி பாதுகாப்பு படையினர் பல்கலைக் கழக மாணவர்கள் மீது நடாத்திய தாக்கதல்களை அடுத்து, மாணவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப் பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இதனால் இன்றைய தினம் யாழ். பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் யாவும் ஸ்தம்பிதம் அடைந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் மாவீரர் தின நிகழ்வுகளை மாணவர்கள் நடாத்த முற்பட்டதனை அடுத்து பாதுகாப்புப் படையினர் பல்கலைக்கழகச் சூழலில் குவிக்கப்பட்டதுடன் ஆண்கள் விடுதிக்குள் நுழைந்து அங்கு மாவீரர் தின நிகழ்வுகள் நடைபெறா வண்ணம் நடவடிக்கைகளை மேற்கொண்டுமிருந்தனர். ஆயினும் குறித்த நேரத்தில் பெண்கள் விடுதியில் மாவீரர் தினச் சுடரேற்றப்பட்டது. இதையடுத்து பெண்கள் விடுதிக்குள் அத்துமீறி நுழைந்த பாதுகாப்பு படையினர் விசாரணைகள் மேற்கொண்டுமிருந்தனர். இச்சம்பவங்களையடுத்து, இன்று காலை மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். பல்கலைக்கழக பிரதான வாயில் கதவினைப் பூட்டி பதாதைகளை எந்தியவாறு வாய்களை கறுப்பு நிறத்துணியினால் கட்டி மௌன எதிர்ப்பு போராட்டத்தினை மாணவர்கள் மேற்கொண்டார்கள்.

பின்னர் மாணவர்கள் பிரதான வாயிலினூடாக வெளியே ஊர்வலமாகச் செல்ல முற்பட்டதனையடுத்து இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து மாணவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டதுடன், சில மாணவர்களை கைது செய்துமிருந்தனர். படையினர் மேற்கொண்ட தாக்குதலை அடுத்த மாணவர்கள் சிதறிய ஓடியதுடன், சிலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழகத்துள் ஓடிய மாணவர்கள் பாதுகாப்பு படையினரை நோக்கி கல்வீச்சத் தாக்கதல்களை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்ட பல்கலைக் கழக மாணவர்கள் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.



இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து மாணவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டபொழுது...

அதேவேளை இச்சம்பவத்தினை அறிந்து அங்கு சென்ற கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் வாகனம் தாக்கப்பட்டதாகவும். அவருக்கும் பாதகாப்பு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் பொலிஸார் அவரை பாதுகாத்து அழைத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டம் அறிவிக்கப்பட்ட தையடுத்து, பல்கலைக் கழக சூழலில் பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டிருந்த நிலையில், பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் ஏற்பாட்டில் மாணவர்கள் வீடுகளுக்குச் செல்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

JUDE ANTHONYPILLAI LL.B.
Barrister, Solicitor & Notary Public
JUDE ANTHONYPILLAI PROFESSIONAL CORPORATION
Tel: 416.332.8547
Fax: 416.332.8379
Email: judelawoffice@rogers.com
Your questions answered! Your options explained!
2390 Eglinton Ave.East, Suite 250, Scarborough, ON. M1K 2P5

Nickes Fancy
நிகேஷ் பான்ஷி
Gents & Ladies Readymade Garments, Sarees, Salwar Kameez, Children Wears, Books & Gift Items
462 Jean Talon West, Montreal, QC. H31 1R3
514.495.3765, 514-270.81.81



பூபாளத்தில் விளம்பரம் செய்ய
Tel: 416.284.4004
e-mail: boobalam@ymail.com



Make Your Dream Home Come True
Mississauga Branch
Monte Carlo Corporate Centre
7045 Edwards Boulevard, Suite 201
Mississauga, Ontario L5S 1X2
905-565-9200
Toronto Office
Morneau Sobeco Centre
895 Don Mills Rd., Ste. 202
Toronto, Ontario M3C 1W3
416-391-3232
Param Gnanaswaran
REAL ESTATE BROKER
Direct: 416 - 230 - 1107
RIGHT AT HOME REALTY INC.
REAL ESTATE BROKERAGE

Keeth Appliance & Heating, Air conditioning Services
Central Air coditioning, furnace repair and installation, Fridge/Washers/Dryers, Dishwashers/Stoves
Certified technicians! Reasonable rates! Reliable service!
Keeth Repair Technician 647.768.4143

BALACHANDRAN MUTHAIAH
Professional Corporation
Balachandran Muthaiah LL.B.
Barrister, Solicitor & Notary Public
Real Estate Law, (Residential/Commercial), Business Law, Family Law, Immigration Law, Estates Law, Last Will, Affidavits, Probate, Translations, etc.
2401 Eglinton Ave. E. Suite 300, Toronto, ON M1K 2M5
Ph: 416.755.5544, Fax: 416.755.5594
e-mail: balalawoffice@gmail.com

# பங்கு பிரிப்புக்களும் படுகொலையும்!

**-சாத்திரி-**

*தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நடவடிக்கைகள் அனைத்தும் இலங்கையில் மே மாதம் 2009 ஆண்டு முடிவிற்கு கொண்டுவரப் பட்டபின்னர் புலம் பெயர் நாடுகளில் எஞ்சியிருக்கும் அதன் கட்டமைப்பின் இன்றைய சமகாலப்பார்வை:*

நவம்பர் 8ந் திகதி வியாழக் கிழைமை இரவு 9.30 தை தாண்டிய நேரம் பாரிஸ் 20 ல் தமிழர் ஒருங்கிணைப்பு குழு அலுவலகத்தில் இந்த வருட மாவீரர் நாள் பற்றிய ஏற்பாட்டு விவாதங்களை முடித்து விட்டு நான்கு பேர் அலுவலகத்தை விட்டு வெளியே வருகிறார்கள். அந்த நான்கு பேரில் மேக்தாவும், மாஸ்ரரும் வீதியால் நேராக நடந்து செல்ல பரிதியும், பார்த்திபனும் வீதியைக் கடந்து அலுவலகத்திற்கு எதிரேயிருந்த பஸ் நிலையத்திற்கு வந்து பஸ்சிற்காக காத்திருக்கிறார்கள். பஸ் நிலையத்தில் வேறு பல வேற்று நாட்டவரும் பஸ்சிற்காக காத்திருந்த வேளை திடீரென ஒரு வெடிச்சத்தத்தோடு பஸ் நிலையத்தின் பின்புற கண்ணாடி உடைந்து நொருங்குகின்றது. எதற்காக கண்ணாடி உடைந்திருக்கலாமென பரிதி உட்பட அனைவரும் திடிக்கிட்டு பார்த்தபொழுது அடுத்தடுத்த துப்பாக்கிச் சூடுகள் பரிதியின் மார்பிலும் வயிற்றிலும் விழுகின்றது. பார்திபன் என்பவர் வீதியை கடந்து ஓடிப்போய் அங்கு நிறுத்தி வைக்கப் பட்டிருந்த கார்களிற்கு பின்னால் ஒழிந்து கொள்ள மற்றையவர்கள் பயத்தில் கண்களை பொத்திக்கொள்கிறார்கள். கொலையாளி அருகில் வந்து பரிதி இறந்து விட்டதை உறுதிசெய்து விட்டு தயாராய் ஒருவன் இயக்கிக்கொண்டிருந்த ஸ்கூட்டரில் ஓடிப்போய் ஏற ஸ்கூட்டர் அந்த இடத்தை விட்டு மறைந்து விடுகின்றது. கொலை நடந்த விதத்தை பாரக்கும் போது கொலையாளி உண்மையான குறிபார்த்துச்சுடும் கைதேர்ந்த கொலையாளி இல்லையென்பது மட்டும் தெளிவாகின்றது. கைதேர்ந்த கொலையாளியாக இருந்திருந்தல் ஒரு மீற்றரிற்கும் குறைவான தூரத்தில் இருந்து சுட்ட முதலாவது குண்டு குறி தவறிப் போயிருக்காது முதலாவது குண்டே பரிதியின் தலையை துளைத்திருக்கும். அல்லது அண்மையில் ஊரில் இருந்து வந்தவராக இருந்திருப்பார் வெளிநாட்டு சூழல் அவரிற்கு பதற்றத்தை கொடுத்திருக்கும். ஆனால் பரிதியோடு கூட இருந்தவர்களின் உதவியோடுதான் தகவல்களை பெற்று கொலைக்கான திட்டம் தீட்டப் பட்டிருக்கும் என்பது உறுதியாகத் தெரிகின்றது.

இது அத்தனையையும் பதற்றத்தோடு கவனித்துக் கொண்டிருந்த ஒருவர் காவல்த்துறையின் இலக்கத்தை அழுத்துகிறார். சில நிமிடங்களில் அங்கு வந்து சேர்ந்த காவல்த்துறையினரிற்கு கெல்மெட் போட்டபடி முகத்தை துணியால் மூடிய இருவர் சுட்டுவிட்டு தப்பிச் சென்றதாக அங்கிருந்தவர்கள் தெரிவிக்க. அதே நேரம் அங்கு வந்து சேர்ந்த தீயணைப்பு படை முதலுதவி பிரிவினர் பரிதியின் உயிர் பிரிந்து விட்டதை உறுதி செய்கிறார்கள். உடனடியாக அங்கிருந்தவர்களின் விபரம் தொலைபேசி இலக்கங்களை பெற்றுக் கொண்ட காவல்த்துறையினர் அவர்களை அகற்றி விட்டு அந்த இடத்திற்கு யாரும் வராதபடி வீதிகளை மூடிவிடுகிறார்கள்.மேலதிக காவல்த்துறையினர் புலநாய்வுத் துறையினர் தடவியல் நிபுணர்கள் என அங்கு விரைகின்றார்கள்.

அதற்கிடையில் பரிதியோடு நின்றிருந்த பார்த்திபன் பரிதி கொல்லப் பட்டு விட்டதாக தனது கைத்தொலைபேசி மூலம் செய்தியை மற்றையவர்களிற்கு தெரிவிக்கின்றார். செய்தி பாரிசில் தமிழர்களிடம் வேகமாகப் பரவுகின்றது. மறுபக்கம் காவல்துறையினர் விசாரணையை நடத்திக் கொண்டிருக்கும் போதே கொலை நடந்த ஒரு சில நிமிடங்களிலேயே தாங்களே தமிழ்த் தேசிய ஊடகம் என்று தங்களைத் தாங்களே பிரகடனம் செய்த சில இணையத்தளங்கள் கொலையாளிகளை கண்டு பிடித்து சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினரால் பரிதி படுகொலை என்கிற செய்தியை வெளியிடுகிறார்கள். அதற்கடுத்த நிமிடங்களிலேயே கொலையாளிகளையும் கண்டு பிடித்து கே.பி. மற்றும் வினாயகம் ஆகியோரின் படங்களைப் போட்டு இவர்கள்தான் கொலையாளிகள் என்றும் செய்திகள் வெளியாகின்றது. இத்தனைக்கும் அப்பொழுதுதான் தடவியல் பரிசோதனைகள் முடிந்து பரிதியின் உடலை பிரெஞ்சு காவல்த்துறையினர் மேலதிக பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.





> *புலிகள் அமைப்பு முடிவிற்கு வந்துகொண்டிருக்கின்றது என்கிற செய்தி 2009 ம் ஆண்டு ஏப்றல் மாதமளவில் அறிந்து கொண்ட அனைத்துகத்தை சேர்ந்தவர்கள் இறுதி யுத்தத்திற்கு என சேகரித்த நிதியில் கிடைத்ததை சுருட்டவும் புலிகளின் அசையும் அசையா சொத்துக்களை பங்கு போடும் போட்டியில் பிரிந்து நின்று சண்டை பிடிக்கத் தொடங்கியிருந்தனர்.*

↙↙↙↙↙↙↙↙↙↙

பரிதியை றேகன் என்கிற பெயரில் 84 ம் ஆண்டு இறுதிகளில் புலிகள் அமைப்பின் அன்றைய பிரதித் தலைவர் மாத்தையாவின் பாதுகாப்பு பிரிவு பொறுப்பாளராக எனக்கு அறிமுகம் ஆகின்றான். பின்னர் 85 ம் ஆண்டு கிளிநொச்சியில் ஒரு முகாம் பொறுப்பாளராக இருந்தவேளை கிளிநொச்சி இராணுவ முகாம் பகுதி யில் நானும் நின்றிருந்ததால் எங்கள் அறிமுகம் நட்பாகி கடந்த ஆண்டு வரை தொடரவே செய்தது. கடந்த வருடம் வரை தமிழர் வாழும் உலக நாடுகள் அனைத்திலும் புலிகள் அமைப்பின் அனைத்துலக செயவக அமைப்பு ஒரு இடத்தில் நடாத்திவந்த மாவீரர் நாளானது கடந்த வருடம் இரண்டு அமைப்புக்களால் இரண்டு இடங்ககளில் நடப்பதற்கான ஏற்படுகள் நடந்து கொண்டிருந்த போது தான் நான் பரிதியை சந்தித்து கதைத்திருந்தேன். இரண்டாவது மாவீரர் நாள் ஏற்பாடுகளை செய்திருந்தவர்கள் புலிகளின் தலைமைச் செயலகம் என்று தங்களை பிரகடனப் படுத்தியிருந்தார்கள். இந்த தலைமைச் செயலகம் என்பவர்கள் யாரென கொஞ்சம் சுருக்கமாக பார்த்து விடலாம். இறுதி யுத்தத்தின் போது யுத்தப் பிரதேசத்திலிருந்தும் மற்றும் யுத்தப் பிரதேசங்கள்ளிற்கு வெளியே அதாவது வடக்கு கிழக்கிற்கு வெளியே நின்றிருந்த இலங்கையிலிருந்து தப்பியோடி இந்தியா மலேசியா சிங்கப்பூர். இந்தோனிசியா. தாய்லாந்து ஆகிய நாடுகளிற்கு வந்து சேர்கிறார்கள். இதில் பெரும் பாலானவர்கள் புலிகளின் புலனாய்வு பிரிவைச் சேர்ந்தவர்கள்.

புலிகளின் முடிவிற்கு பின்னரும் புலிகளின் பெயரில் தொடர்ந்து ராமு சுபன் என்னும் பெயரில் மலேசியாவில் இருந்து வெளியான அறிக்கைகள் இவர்களுடையதுதான்.

இப்படி வந்து சேர்ந்தவர்கள் தாங்கள் வெளி நாடுகளிற்கு வருவதற்காகவும் மற்றும் முகாம்களில் தங்கியிருக்கும் தங்கள் குடும்பங்களை மீட்கவும் வெளிநா டுகளில் இருந்த அனைத்துலகச் செயலகப் பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு பண உதவிகளை கோருகின்றனர்.

ஆனால் புலிகள் அமைப்பு முடிவிற்கு வந்துகொண்டிருக்கின்றது என்கிற செய்தி 2009ம் ஆண்டு ஏப்றல் மாதமளவில் அறிந்து கொண்ட அனைத்துகத்தை சேர்ந்தவர்கள் இறுதி யுத்தத்திற்கு என சேகரித்த நிதியில் கிடைத்ததை சுருட்டவும் புலிகளின் அசையும் அசையா சொத்துக்களை பங்கு போடும் போட்டியில் பிரிந்து நின்று சண்டை பிடிக்கத் தொடங்கியிருந்தனர். ஆனால் யாரும் பெரிய வன்முறைகளில் இயங்காமல் புத்திசாலித் தனமாக நடந்து கொண்டார்கள் காரணம் வன்முறைகள் பின்னர் வழக்காகி காவத்துறைக்கு போனால் அவர்கள் நோண்டியெடுத்து உள்ளதையும் பிடுங்கி விடுவார்கள் என்கிற பயம் அவர்களிற்கு. ஏனெனில் புலிகள் இயக்கத்திற்கு உலகம் முழுவதும் உள்ள வர்த்தக வியாபரங்களால் மாதம் ஒன்றிற்கு சுமார் 300 மில்லியன் டெலர்களை வருமானமாகப் பெறும் அமைப்பாக இருந்தது. இலங்கையரசே கடன் வாங்கி ஆயுதம் வாங்கி சண்டை பிடித்தக் கொண்டிருந்தபோது புலிகள் அமைப்பு தங்கள் பணத்திலேயே நவீனரக ஆயுதங்களாக இறக்கி சண்டை பிடித்துக்கொண்டிருந்தார்கள். 2001ம் ஆண்டிற்கு பின்னர் அவர்களால் ஆயுதங்களை வன்னிக்குள் கொண்டு சேர்க்க முடியாமல் போனது வேறு கதை.. அப்படி உலகம் முழுவதும் சொத்து சண்டைகள் நடக்கத் தொடங்கியிரந்த போது பிரான்சில் பிரிந்து சண்டை பிடித்தவர்களில் முக்கியமாக பரிதி மேக்தா சுக்குளா போன்றவர்கள் ஒரு புறமும் ஆதித்தன் சாம்ராஜ் போன்றவர்கள் மறுபுறமுமாக பங்கு பிரிக்கத் தொடங்கியிருந்தார்கள். சாம்ராஜ் என்பவரே புலிகள் அமைப்பின் பணத்தை உண்டியல்முறை மூலம் மற்றைய நாடுகளிற்கு பரிமாற்றம் செய்பவர். இறுதி யுத்தத்திற்கென சேகரித்த பெருமளவு நிதி இவரின் கைகளிலேயே இருந்தது. பரிதி கொலை செய்யப் பட்ட பின்னர் இவரும் பிரான்சு காவல்த்துறையால் விசாரிக்கப்பட்டிருந்தார். விசாரணை முடிந்து வெளியில் வந்ததும் நாட்டை விட்டு வெளியேறி விட்டார். இவர் தென்னாபிரிக்கா சென்றிருக்கலாம். அதற்கிடையில் பினாமிகளாக தனியார்கள் பெயரில் இருந்த வர்த்தக நிலையங்களின் பினாமிகள் சிலரை மிரட்டியும் பார்தார்கள். அவரகளோ போலிசுக்கு போனடித்து விடுவோம் என்றதும் பயத்தில் விட்டு விட்டார்கள். எனது நகரத்திலும் அப்படி புலிகளின் பினாமி உணவகம் ஒன்று ஈழம் றெஸ்ரோரனற் என்கிற பெயரில் ஒருவரால் இயக்கப் பட்டுக்கொண்டிருந்தது ஆனால் கடந்த வருடத்திலிருந்து அதன்பெயர் இந்தியன் றெஸ்ரோறன்ராக மாறி விட்டது.

இப்படி இவர்களது சண்டையில் தப்பி வந்தவர்களது உதவிக் கோரிக்கைகளை யாரும் கவனத்தில் எடுக்கவில்லை. ஆனால் தப்பி வந்தவர்கள் தங்கள் தனிப்பட்ட நண்பர்கள் உறவுகளின் உதவிகளுடன் சுமார் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் ஐரோப்பாவிற்குள் வந்து விடுகிறார்கள். அப்படி வந்து சேர்ந்தவரகளில் பலர் தாங்கள் தங்கள் விசாப் பிரச்சனை வேலை என்று இருந்துவிட்டார்கள்.

4ம் பக்கம் பார்க்க...

# அழிவுக்கு முன் அகந்தை

அதிகாரம் என்பது ஒரு போதைப்பொருள். போதை தலைக்கேறியதும், தன்னை யாரும் எதுவும் செய்ய முடியாது, சட்டங்களும் விதிகளும் மற்றவர்களுக்கானதே அன்றி தனக்குப் பொருந்தாது என்ற எண்ணத்தைக் கொடுக்கும். அழிவுக்கு முன் அகந்தை என்பது இதைத்தான். இப்படி அழிவுக்கு முன்னால் அகந்தை தலைக்கேறி தமது வீழ்ச்சிக்கே வழிகோலியவர்களை நாங்கள் சமீப காலங்களிலையே கண்டிருக்கிறோம்.

அந்த வரிசையில் ரொறன்ரோ நகரபிதா றொப் போர்ட்டும் விதிகளும் சட்டங்களும் தனக்குச் செல்லுபடியாகாது என்ற நினைப்பில் நடக்கப் போய், இன்று பதவி இழந்துபோகும் நிலையில் நிற்கிறார். நகரபிதா பதவி இழக்கப்போவது ஒன்றும் தலை போகிற விடயத்திற்காகவும் அல்ல.

தான் மாநகர சபை உறுப்பினராக இருந்த போது, தன்னுடைய தனிப்பட்ட உதைபந்தாட்ட பயிற்சி அமைப்புக்கு நிதி உதவி வழங்குமாறு, மாநகரசபையில் வர்த்தகர்களின் நலன்களை முன்னெடுப்போரிடம் (lobbyists) கேட்டிருந்தார். இதற்கு போர்ட் தன்னுடைய அலுவலகக் கடிதத் தலைப்பையும் மற்றும் மாநகர வளங்களையும் பயன்படுத்தியது தவறு என்று நகரின் Integrity ஆணையரிடம் இருந்து வந்த ஆறு அறிவிப்புகளையுஜம் உதாசீனம் செய்ததையடுத்து ஆணையர், அப்போதைய நகரபிதாவை இது குறித்து நடவடிக்கை எடுக்க வற்புறுத்துமாறு மாநகராட்சி உறுப்பினர்களுக்கு பரிந்துரை செய்திருந்தார். அவர்களும் போர்ட் தனக்கு கிடைத்த மூவாயிரம் டொலர்களையும் திரும்பிக் கொடுக்க வேண்டும் என்று வாக்களித்திருந்தனர்.

பின்னர் போர்ட் நகரபிதாவாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னால், அதிகாரம் கைக்கு வந்ததும், பணத்தை திருப்பிச் செலுத்துமாறு கட்டளையிட்ட முன்னைய தீர்மானத்தை தன்னுடைய ஆதரவான உறுப்பினர்களின் உதவியுடன் ரத்துச் செய்திருந்தார். இந்த விவாதத்தில் கலந்து கொண்ட போர்ட் பெரும்பான்மையினருடன் சேர்ந்து தானும் வாக்களித்திருந்தார்.

ஒன்ராறியோவின் மாநகராட்சி சட்டத்தின்படி, நலவுரிமை முரண்பாடுகள் சம்பந்தப்பட்ட வாக்களிப்பு எதிலும், தன்னைப் பற்றி நடத்தப்படும் வாக்களிப்பில், அதில் சம்பந்தப்பட்டவர் வாக்களிக்க முடியாது. அந்தச் சட்டத்தை மீறி வாக்களித்ததை ஆட்சேபித்து சாதாரண பிரஜை ஒருவர் வழக்குத் தொடர்ந்திருந்தார். அதை விசாரித்த நீதியரசர் போர்ட் சட்டத்தை மீறியதை ஏற்றுக் கொண்டு அவரது பதவியை வெற்றிடமாக்கியுள்ளார்.

இந்த தீர்ப்பு கூட, பதினான்கு நாட்களுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக பதவியை நீக்கினால் ஏற்படக் கூடிய சிக்கல்களைத் தவிர்த்து, மற்றைய மாநகர உறுப்பினர்கள் பதில் நகரபிதாவைத் தெரிவு செய்வதா அல்லது தேர்தலை நடத்துவதா என்று முடிவு செய்வதற்கு வசதியாகவே இந்த நீடிப்பு. இருந்தாலும் இதற்குள் போர்ட் மேன்முறையீடு செய்வதன் மூலம் தன் பதவிக் காலத்தை நீடிக்க முயற்சிக்கக் கூடும். இந்தச் சட்ட இழுபறிகளும் அதன் முடிவுகளும் என்னவாகும் என்பதல்ல பிரச்சனை.

ஜனநாயக ரீதியில் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்று பதவிக்கு வந்த ஒருவரை, நீதிபதி பதவி நீக்குவதும், அதுவும் ஒரு முக்கியத்துவம் இல்லாத ஒரு விடயத்திற்காக என்பதும், இன்று பலத்த வாதப் பிரதிவாதங்களைத் தோற்றுவித்திருக்கிறது. மேற்குலகின் ஜனநாயகப் பாரம்பரியங்கள் சில நேரங்களில் நம்ப முடியாத விடயங்களைக் கூட நடக்க வைத்து விடும் என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம்.

பெரும்பான்மை மக்களின் ஆதரவுடன் பதவிக்கு வந்தாலும், பெரும்பான்மை மக்கள் கூடத் தவறிழைக்கக் கூடிய சந்தர்ப்பங்களுக்கான உதாரணமாகத் தான் றொப் போர்ட்டின் வெற்றி கருதப்படுகிறது. மாநகர சபையில் ஊழல் நடக்கிறது, பணம் விரயமாகிறது என்ற பிரமையை ஏற்படுத்தி, வெறும் கோஷங்களுடனும், பெரும் வாக்குறுதிகளுடனும் பெறப்பட்டது தான் அந்த வெற்றி. இது வரை காலமும் போர்ட் மாநகர உறுப்பினராக இருந்த காலத்தில் கூட, தனியாக நின்று அனேகமான சமூம்சார் திட்டங்களை கண்ணை மூடிக் கொண்டு எதிர்ப்பவராகவே செயற்பட்டிருந்தார்.

சமூகத்தில் உக்கிரமான பொருளாதர் பிரச்சனைகளுக்கு முகம்கொடுப்பவர்கள் பயன்படக் கூடிய திட்டங்களைக் கூட எதிர்ப்பவராகவும், பொருளாதார ரீதியாக சாத்தியமில்லாத திட்டங்களை ஆதரிப்பவராகவுமே காணப்பட்டிருந்தார். அரசியல்வாதிகள் மீதான பொதுவான எதிர்ப்புணர்வைச் சாதகமாக்கி, வெற்று உறுதிமொழிகளை நம்பும் வாக்காளரின் தயவில் தான் றொப் போர்ட் பதவிக்கு வந்தார். இதில், வசதியான குடும்பத்திலிருந்து வந்ததால், தன் அலுவலக செலவுகளை தன் சொந்தப்பணத்தில் செலவிட்டு விட்டு, மற்ற உறுப்பினர்கள் தங்களுக்கு கிடைக்கும் பணத்தை விரயமாக்குகிறார்கள் என்று குற்றம் சாட்டியதை பலரும் நம்பினர்.

வசதியான குடும்பத்தில் பிறந்தவர்கள் அனேகருக்கு இருக்கக் கூடிய தங்களுக்கு எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற உணர்வுடனான அகங்காரத்துடன்தான் றொப் போர்ட்டின் ஆட்சி ஆரம்பித்தது. அதிலும் நகரபிதா பதவிக்காக போட்டியிடுவதால், தனது அங்கத்தவர் ஆசனத்தை கைக்குள் வைக்க தன் சகோதரனை போட்டியிட்டு வெல்ல வைத்து, இரண்டு பேரும் மல்யுத்த ஜோடிகள் போலவே நடந்து கொண்டனர்.

சமூகத்தின் தலைவர் அதன் எல்லா பிரஜைகளுக்குமானவர் என்ற எண்ணம் இல்லாமல், தமது கண்களை மூடிக் கொண்டே பின் தொடரும் ஆதரவாளர்கள் கேட்க விரும்பும் விடயங்களைச் சொல்லிக் கொள்ளும் ஒருவராகவே இவர் காணப்பட்டார். மத்திய அரசு தன் செலவில் தாதி ஒருவரை வழங்க முற்பட்ட போது, அதற்கு எதிராக தனித்து வாக்களித்த பெருமை அவருக்குரியது. இதையும் விட, தனது தேர்தல் செலவுக்கு தன் குடும்ப நிறுவனத்தில் பணம் பெற்றது, மாநகராட்சி உணவு நிறுவனம் ஒன்றுக்கு கொந்தராத்து வழங்கியதில் ஊழல் நடந்தது என்ற பாணியில் பேசியதால் வந்த மானநட்ட வழக்கு என வேறு வழக்குகளுக்கும் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது.

ஆக மொத்தத்தில் பெரும்பாலான மக்களின் ஆதரவு என்ற பெயருடன் ஒரு பொறுப்பற்ற ஆட்சியையே இதுவரை நடத்தி வந்திருக்கிறார். இது தமிழர்களான எங்களுக்கு ஒன்றும் புதிய விடயமல்ல. பகுத்தறிவுடன் செயற்படாமல், வெறும் பசப்பு வார்த்தைகளையும் சாகச விளையாட்டுக்களையும் நம்பி பின்னால் போயும் கற்றுக் கொள்ளாத இனமாக இருக்கும் எங்களுக்கு சில நேரம், இந்த ஜனநாயகச் சிக்கல்கள் சிரிப்புக்குரியதாகக் கூட இருக்கலாம்.

இங்குள்ள ஜனநாயகப் பாரம்பரியங்கள் அதிகாரத்திற்கு சில அடிப்படை எல்லைகளை வைத்திருக்கின்றன. மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளும், நேரடியாகவோ அல்லது பிரதிநிதிகளாலோ தெரியப்படும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் பிரதமரும் மட்டும் அதிகாரத்தைக் கையில் கொண்டு தான் தோன்றித் தனமாக நடக்காமல், அதைக் கட்டுப்படுத்த நீதித் துறைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இதனால் மக்கள் பிரதிநிதிகளும் தலைவர்களும் எடுத்த முடிவைக் கூட நீதித் துறை மறுக்கும் சம்பவங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

இதைக் கண்டதும் பலரும் “இது எங்ஙனம் ஆகும்?“ என சீற்றம் கொண்டாலும், நீதித் துறை என்பது ஏதோ ஒரு சில நீதிபதிகளான தனிமனிதர்களைக் கொண்டதல்ல. அது கூட, மக்கள் பிரதிநிதிகள் சேர்ந்து இயற்றிய சட்டங்களை அமுல்படுத்துவதற்கான ஒரு அமைப்பே. இதனால் தான் சாதாரண பிரஜை கூட நீதி வேண்டி அதி உச்ச நீதிமன்றம் வரைக்கும் செல்ல முடிகிறது.

சட்டங்களை எவ்வாறு விரோதமாக மீறுவது என்பதிலேயே சிந்தனை ஆரம்பித்து, ஆயுதங்களின் அதிகாரத்திற்கு தலை குனிந்து பழகிப் போன எங்களுக்கு, சில நேரம் இந்த நீதித் துறை விவகாரங்கள் அனாவசியத் தலையிடியாகக் கூடத் தோன்றலாம்.

ஆனால் தனிமனித உரிமைகளை மதிக்கும் இங்குள்ள பாரம்பரி யங்களுக்கு இது ஒரு தலை போகும் பிரச்சனை. அதிகாரங்களுக்கு தலை குனிந்தால் அடிமைகளாக வேண்டும் என்பதை உணர்ந்ததால் அதைத் தடுப்பதற்கான முயற்சி சாதாரண மக்கள் மட்டுமன்றி, அவர்களின் குரலாக உள்ள ஊடகங்கள் மூலமாகவும் மேலெழுகிறது. இதனால் அதிகார துஷ்பிரயோகத்தையும் வழி தவறிய தலைமை மக்களை அழிவுக்கு இட்டுச் செல்வதையும் தடுக்க முடிகிறது.

றொப் போர்ட் விடயத்தில், ரொறன்ரோ ஸ்டார் கடும் போக்கைக் கொண்டிருந்தது இதற்கு உதாரணமாகலாம். சாதாரண மக்களால் ஒரு தலைமையின் தவறான போக்கை புரிந்து கொள்ள முடியாவிட்டால் ஊடகங்கள் அதை முன்னெடுக்க வேண்டிய கடமையும் கட்டாயமும் உண்டு.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் என்பதற்காக அவர்கள் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையையும் அங்கீகரிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பகுத்தறிவு இல்லாமல் உணர்வு பூர்வமாக பின்னால் போகும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களுக்கு எல்லோரும் தலை வணங்க வேண்டிய கட்டாயமும் இல்லை. இதனால் தான் தனி மனிதர்களான பிரஜைகளின் குரலை விட, ஊடகங்களின் குரலும் நீதித் துறையின் தலையீடும் இங்கு அவசியமாகிறது.

ஆனாலும், என்னவோ இந்த நிகழ்வு கனடாவில் நடைபெறுவதால், நகர பிதாவை நீதிமன்றத்தால் பதவி நீக்க முடிகிறது. நகர பிதா அதை எதிர்த்து மேன்முறையீடு செய்ய வழியிருக்கிறது.

ஆனால் இன்று இலங்கையில் நீதித் துறை மீதான அச்சுறுத்தல் பாரிய அளவில் எழுந்திருக்கிறது. றொப் போர்ட் சகோதரர்கள் போல, மகிந்த சகோதரர்களும் சட்டம் தங்களுக்கு செல்லுபடியாகாது என்று மட்டுமல்ல, நீதித் துறை மீது கை வைக்கும் அளவிலும் இருக்கிறார்கள். ஜனநாயக முறைப்படி பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியும், பெரும்பான்மைப் பலம் உள்ள பாராளுமன்றமும் கையில் இருக்கிறது என்பதற்காக நீதித் துறையும் அடி பணிய வேண்டிய கட்டாயம் இல்லை. சுதந்திரமான நீதித் துறை தான் ஜனநாயகத்தை உறுதி செய்கின்ற முதுகெலும்பு. அந்த முதுகெலும்பை முறிக்க முயல்வதன் மூலம் ஒரு சர்வாதிகார வழியில் தான் இலங்கை அரசும் போய்க் கொண்டிருக்கிறது. முன்னைய பிரதம நீதியரசருக்கு நடந்தது போலவே, தற்போதைய பிரதம நீதியரசருக்கும் எதிரான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன. ஊழல் குற்றச்சாட்டுக்களை பிரதம நீதியரசருக்கு எதிராக சுமத்தினாலும் அதன் பின்னணியில் அரசு கொண்டு வந்த சட்ட மூலங்களுக்கு நீதித் துறை தடையாக விளங்குவது தான் காரணம் என்று எல்லோருக்கும் தெரியும்.

ஊழல் என்பது ஆட்சியின் ஒரு அங்கமாகவும், பெயர் போன சமூக விரோத சக்திகள் அரசில் பங்கு கொண்டு இருக்கும் நிலையில், இந்த ஊழல் குற்றச்சாட்டுக்கள் பழி வாங்கும் நடவடிக்கையின் அங்கமே.

அதிகார போதை தலைக்கேறி, அகந்தையால் ஆடியவர்கள் அழிந்த கதை இலங்கை அரசியலிலும் போராட்டத்திலும் புதியதல்ல. மகிந்த சகோதரர்களுக்கும் தங்களை யாரும் செய்ய முடியாது என்ற அகந்தை தலைக்குள் ஏறி, ஊடகங்கள் மீதான அச்சுறுத்தலில் தொடங்கி நீதித் துறை வரைக்கும் வந்திருக்கிறது. எதிரிகளைப் போட்டால் சரி என்று அரசியல் நடத்தியவர் போலவே, எதிரிகளைச் சிறையில் அடைத்தோ, அல்லது இனம் தெரியாதவர்கள் மூலம் கடத்தியோ அரசியல் நடத்துபவர்களும் மண் கவ்வுவார்கள் என்பதை அறிந்து கொள்ள அம்பாந்தோட்டைக் காரர்கள் ரொறன்ரோ வரைக்கும் வரத் தேவையில்லை. இலங்கையின் வரலாற்றைத் திரும்பிப்பார்த்தாலே போதும். ■



ஏடு இட்டோர் இயல்

பூபாளம் வார இதழ்
Palm Springs Newspapers Ltd
நிறுவனத்தினரால்
ரொறன்ரோ, கனடாவில்
வெளியிடப்படுகிறது.

ஆசிரியர் குழு
சுல்பிகா
தவபாலன்
ரமேஷ்
தர்சன்

கனடியச்செய்திகள்-ஶ்ரீரஞ்சினி
உலகச் செய்திகள்-மகேஸ்
இந்தியச் செய்திகள்- முகுந்தன்
கலையுலகச் செய்திகள்-சுமதி
வாழ்வு,நலம்-சங்கமி
விளையாட்டு-பரதன்

இந்த இதழில்
வெளியாகும் ஆக்கங்களில் உள்ள கருத்துக்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு. அவை பூபாளத்தின் கருத்தைப் பிரதிபலிப்பனவாய் இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை. ஆக்கங்களின் கருத்துச் சிதைவுறாமல், மாற்றங்களைச் செய்யும் உரிமை ஆசிரியர் குழுவுக்கு உண்டு.

வெளியாகும் விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களே பொறுப்பு.

**Editorial Board**
Zulfika, Ramesh,
Dharsan, Thavapalan

Boobalam is published by
George R.Ckrhushchev for
Palm Springs Newspapers Ltd.

1345, Morningside Ave #8,
Scarborough, On, M1B 2T3
Tel: 416 284 4004
e-mail: boobalam@ymail.com
Web:www.boobalam.com
Palm Springs Newspapers Ltd is a division of Palmgrove Media Group Inc.

## பங்கு பிரிப்பும்...

ஆனால் பெருமளவு பணத்தை பதுக்கி வைத்துக்கொண்டு தங்களிற்கு உதவவில்லையென்கிற கோபம் வெளிநாடுகளிற்கு வந்து சேர்ந்தவர்கள் நேரிலும் சென்று பண உதவி செய்யுமாறும் தாயகத்தில் பாதிக்கப்பட்ட போராளிக் குடும்பங்களிற்கு உதவுமாறும் கேட்டுப் பார்க்கிறார்கள். அதுவும் அனைத்துலகத்தை சேர்ந்தவர்களால் மறுக்கப்படவே புதிதாய் வந்து சேர்ந்தவர்கள் சிலர் இணைந்து தாங்களே தலைமைச் செயலகம் தாங்கள்தான் தாங்கள் தான் புலிகள் அமைப்பின் அனைத்து விடயங்களையும் முடிவெடுக்கும் அதிகாரம் உடையர்கள் என அறிக்கையொன்றையும் விடுகிறார்கள். அப்படி தலைமைச் செயலகம் என்வர்களில் இலண்டனில் சுரேஸ். ராமு சுபன்.மற்றும் சங்கீதன் . பிரான்சில் தமிழரசன். கனி. ஜெர்மனியில் தும்பன் புலவர் போன்றவர்கள் முக்கியமானவர்கள்.

இவர்களது வருகையும் அறிக்கையும் ஏற்கனவே வெளிநாடுகளில் அனைத்துலகச் செயலகத்தில் இருந்து ஒதுக்கப்பட்டு அல்லது துரத்தப்பட்டவர்களிற்கு புதிய உற்சகத்தை கொடுக்க அவர்களும் தலைமைச் செயலகத்தோடு கைகோர்த்துக் கொள்கிறார்கள். இது இப்படியாக போய்க்கொண்டிருக்கும் போது புலிகளின் முடிவில் தொடங்கப் பட்ட நாடு கடந்த தமிழீழ அரசையும் இயங்க விடாமல் மிக மோசமாக அனைத்துலகச் செயலகத்தினர் எதிர்த்துக் கொண்டிருந்தனர். அனைத்துலகத்தின் ஜெர்மனிய பொறுப்பாளர் வாகீசன் என்பவர் தான் இருக்கும் வரை நாடு கடந்த தமிழீழ அரசை இயங்க விடமாட்டேன் ஒரு இடத்தில் கூட்டம் நடாத்த விடமாட்டேன் என பகிரங்கமாக சவால் விட்டிருந்ததோடு மட்டுமல்லாமல் ஜெர்மனி பிரான்ஸ் சுவிஸ் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் நா.க.அரசின் கூட்டங்களை குளப்பிக்கொண்டும் இருந்தார்கள். கே.பி கைதாகிய பின்னர் நா.க அரசை இயக்கியவர்கள் அனைவருமே கோட்சூட் போட்ட கனவான்கள். யாராவது வேட்டியை மடித்துக்கட்டிக்கொண்டு சண்டை என்று இறங்கினால் ஒதுங்கி ஓரமாய் போய் விடுகிறவர்கள். அவர்களது கூட்டங்களில் அனைத்துலகச் செயலகத்தினர் வேட்டியை மடித்துக் கட்டியபடி வாடா வா..என்கிற மிரட்டல்களால் பயந்து போய் கையை பிசைந்து கொண்டு நின்றவர்களிற்கு இந்த புதிய தலைமைச் செயலக வரவுகள் தங்கள் ஆதரவுக் கரங்களை நீட்டவே அப்படியே பாய்ந்து பற்றிக் கொண்டார்கள். இப்படியான புது கூட்டணி இன்னொரு மாவீரர் தினத்தை கடந்த வருடம் அறிவித்ர் நானும் வேறு சில முன்னைநாள் போராளிகளும் ஒரு சமரசத் திட்டத்தோடு பரிதியை சந்தித்திருந்தோம்.

எங்கள் சந்திப்பானது மாவீரர் தினத்தை பிரிக்காது ஒற்றுமையாக நடத்துமாறும் அதே நேரம் இயக்கத்தின் வர்த்தக நிறுவனங்களை நடாத்துபவர்கள் அதன் வருமானத்தில் 20 வீதத்தை மாதா மாதம் பாதிக்கப்பட்ட போராளிக் குடும்பங்களிற்கு கொடுக்குமாறும் கோரிக்கை வைத்தோம். சிலர் 5 வீதத்தை தருவதாக ஒத்துக் கொண்டார்கள். ஆனால் மாவீரர் நாள் இணைந்து செய்யமுடியாது என்று மறுத்ததோடு அதற்கு அவர்கள் கூறிய காரணம். இறுதி யுத்தத்தில் இருந்து தப்பிவந்தவர்கள் அனைவரும் இலங்கை புலனாய்வு பிரிவால் அனுப்பப் பட்டவர்கள் அவர்களுடன் இணைய முடியாது அவர்களிற்கு வருமானத்தில் பங்கும் கிடையாது என்றுவிட்டார்கள். புதிதாய் வந்தவர்கள் சிலரில் எனக்கும் சில சந்தேககங்கள் இருக்கத் தான் செய்தது அதனை கட்டுரைகளாகவே கடந்து ஆண்டு எழுதியிருக்கிறேன். ஆனால் உண்மையில் அவர்கள் இலங்கை இந்திய புலனாய்வுத் துறையால் இயக்கப் பட்டாலும் நாங்கள் இனியென்ன அடுத்த ஆயுதப் போராட்டமா நடாத்தப் போகிறோம் மாவீரர் தினம் தானே. இரண்டாம் உலக யுத்தத்தில் கொல்லப் பட்ட ஜெர்மனிய இரணுவத்தினரிற்கே பிரான்சு அரசு நினைவுத் தூபி கட்டி அஞ்சலி செலுத்தியிருக்கிற போது எங்கள் மாவீரர்கள் தினத்தை இலங்கை இந்திய புலனாய்வு துறை என்று சந்தேகப் படுபவர்களோடு இணைந்து செய்வதில் எவ்வித நட்டமும் இல்லை அவர்கள் மாவீரர் தினத்தை உளவு பார்த்து என்ன செய்யப் போகிறார்கள் என வாதாடியிருந்தோம். ஆனால் அவங்களா நாங்களா என மோதிப் பார்த்து விடுவோம் என்று அனைத்துலக செயலகத்தினர் சவால் விட்டார்களே தவிர இணக்கத்திற்கு வரவில்லை. அதன் பின்னர் மாவீரர் தினமும் இரண்டாக நடந்து முடிந்தது. கடந்த வருடம் பரிதியும் தாக்குலிற்குள்ளாகியிருந்தார். அது மட்டுமல்ல அனைத்துலக செயலக இலண்டன் பொறுப்பாளர் தனம் மீதும் தாக்குதல் நடாத்தப் பட்டிருந்தது.

இந்த வருடம் பரிதி கொலை செய்யப் பட்டு விட்டார். கொலை நடந்த மறுநாள் பரிதிக்கு தளபதி. லெப். கேணல். கேணல் என்று அவரவர் தங்கள் விருப்பத்திற்கு பதவிகள் கொடுத்து இணையத்தளங்களில் அஞ்சலி வெளியிட்டிருந்தார்கள். தற்சமயம் விடுதலையாகி வவுனியாவில் வசிக்கும் முன்னை நாள் போராளியொருவர் பரிதி பற்றி கதைத்தபோது அவர் சொன்னது எங்கடை தலைவர் தளபதி கேணல் எல்லாரையும் வெளிநாட்டிற்கு அனுப்பிப் போட்டு வெறும் சப்பையள் எங்களை வைச்சு சண்டை பிடிச்சதிலைதான் தோத்து போனவர் என்று சொல்லி சிரித்தான். இது இப்படியிருக்க கொலை நடந்து நான்கு நாட்கள் கழித்து நடராசா மகீந்திரன் (பரிதி)கொலைச் சந்தேக நபர்கள் இருவர் கைது என்கிற செய்தி பிரெஞ்சு ஊடககங்களில் வெளியாகின்றது. றமேஸ் மற்றும் பிறேம் என்பவர்களே கைதானவர்கள் இவர்கள் பெயர்களை இதுவரை காவல்த்துறையினர் இன்னமும் அதிகாரபூர்வமாக வெளியிடவில்லை. அதற்கடுத்ததாக தாஸ் என்கிற முன்னைநாள் ரெலோ உறுப்பினர் ஒருவரும் கைதாகிறார். இந்தக் கைதுகளும் தமிழ் இணையத் தளங்கள் தங்கள் கற்பனைகளை செய்திகளாக்கி கொண்டும் இருக்கும் போது ஏற்கனவே இரண்டு மாவீரர் தினத்திற்கான இடங்கள் பற்றிய செய்திகள் வெளியாகியிருந்த வேளை திடீரென வேறு சிலர். தாங்களே உண்மையான புலிகள், தங்களிற்குத்தான் தலைவர் மாவீரர் தினத்தை நடாத்துமாறு கட்டளையிட்டிருக்கிறார் என்றபடி இலண்டனில் மூன்றாவது மாவீரர் தினத்தை இந்த வருடம் அறிவித்திருக்கிறார்கள்.

கொலை தொடர்பாக கைது செய்யப் பட்டவர்கள் யார்?? இந்த திடீர் மூன்றாவது மாவீரர் தினத்தை நடாத்துவதுயார் என்கிற விபரங்களோடு அடுத்த பதிவில் சந்திக்கிறேன்.

நன்றி தொடரும்.................


காலம் இலக்கிய நிகழ்வு

பேச்சு | பாட்டு | நடனம் | கூத்து

காலம் சஞ்சிகையின் 40வது இதழ் வெளியீடு




விஜயமனோகரன்

அண்ணாவியார் இசைத்தென்றல் ம.யேசுதாசன்

அ.முத்துலிங்கம், என்.கே. மாகலிங்கம், செல்வா கனகநாயகம்
சேரன், வெங்கட்ரமணன், சந்திரகாந்தன்

ஆனந்தப்பிரசாத்,
மாலினி பரராஜசிங்கம்

-digi Media Creations-



வாழும்தமிழ்
புதிய புத்தகங்கள்
குறைந்த
விலையில்

St. Maria Goretti Catholic School
21 Kenmark Boulevard
(Kennedy Road & Eglinton Avenue East)

kalam@tamilbook.com
416-731-1752

DEC
01
மாலை 5:30

## மேயர் Rob Ford குற்றவாளி எனத் தீர்ப்பு

மேயர் Rob Ford நகரத்தின் கொள்கைகளுக்கு முரணாக செயல்பட்டார் என்று நீதிபதி தீர்ப்பளித்து இருக்கிறார். இதன்படி இனி சுழடி குழசன மேயர் பதவியில் இருக்க முடியாது.

ஆனால் அவர் உடனடியாக பதவி விலகினால் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்படும் என்பதால் அவர் பதவியில் இன்னும் பதினான்கு நாட்கள் நீடிக்கலாம் என்றும் அத்துடன் மீண்டும் மேயர் பதவிக்கு அவர் போட்டியிடலாம் என்றும் தீர்ப்பு கூறுகிறது.

கால்பந்தாட்டக்குழுவில் இருந்த கஷ்டப்பட்ட பிள்ளைகளுக்காகவே தான் காசு சேர்த்ததால் அது பிரச்சனையாக வரும் என தான் எண்ணியிருக்கவில்லை என்று சொன்ன மேயர் Rob Ford, இருந்தாலும் நீதிமன்றத் தீர்ப்புக்குத் தான் கட்டுப்படுவதாகக் கூறினார்.

## பாரிய அளவில் marijuana பயிர்ச்செய்கை

திங்கள் கிழமை இரவு நடந்த Durham பொலிசாரின் வழமையான போக்குவரத்துச் சரிபார்ப்பு ஒன்று Pickering ல் உள்ள பாரிய அளவில் அயசதைரயெ போதைப்பொருள் பயிர்ச்செய்கை ஒன்றைக் கண்டுபிடிக்க வழிவகுத்துள்ளது. அந்த வாகனத்தில் 60 பைகளில் பசளையும் பெருமளவில் பணமும் இருந்திருக்கின்றது. Jing Xuan Jiang, என்ற மார்க்கத்தைச் சேர்ந்த 48 வயதுடையவரும் Tung Li என்ற றொறன்றோவைச் சேர்ந்த 41 வயதுடையவரும் விசாரணைக்காக தடுத்து வைக்கப்படப்பட்டுள்ளனர்.

## துவிச்சக்கர வண்டியில் சென்றவர் தலத்தில் மரணம்

Samson, 35 வயதான ஆரம்பப் பாசாலை ஆசிரியரை மினி வான் ஒன்று வெள்ளிக்கிழமை காலை மோதி யதால் அவர் தலத்திலேயே மரண மாகியுள்ளார். அந்த இடத்தில் நிற்காமல் மறைந்த 22 வயதான Miguel Oliveira. பின்னர் பொலிசில் சரணடைந்துள்ளார்

## தீங்கு விளைவிக்கும் வாயுக்களைக் குறைக்க புதிய விதி

வாகனங்களிலிருந்து வரும் சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் வாயுக்களைக் குறைக்க ஒட்டாவா புதிய விதிகளை அமுலுக்கு கொண்டுவந்துள்ளது. அதன் படி 2017 க்கும் 2025 க்கும் இடையில் உற்பத்தி செய்யப்படும் வாகனங்கள் சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் சராசரியாக 5 வீதத்தினால் குறைக்க வேண்டும். இது வாகன

## இணங்கப் போவதில்லை!

13ம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்ய இணங்கப் போவதில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலை வர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

13ம் திருத்தச் சட்டத்தை பூரணமாக ரத்து செய்யும் முனைப்புக்களுக்கு ஒரு போதும் ஒப்புக் கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தென் பகுதி நகரான காலியில் நடைபெற்ற கூட்டமொன்றின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

13ம் திருத்தச் சட்டத்தை ஆதரிக்கும் அரசியல் கட்சிகளுடன் இணைந்து புதிய கூட்டணி ஒன்றை உருவாக்க விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

13ம் திருத்தச் சட்டத்தை ஆதரிக்கும், ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளை அணி திரட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 10 நிமிடம் அவகாசம்!

Parking Ticket இல் காட்டப்பட்ட நேரத்துக்கு 10 நிமிடம் மேலாக நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களுக்கே இனிமேல் பொலிசார் tickets வழங்க வேண்டும் என்று நகர சபை தீர்மானித்துள்ளது. இந்த அவகாசம் முன்பு 5 நிமிடங்களாக இருந்தது குறிப்பிடத்தக்கது. நகருக்கு $21 மில்லியன் நிகர வருமானம் வரக்கூடிய $80 மில்லியன் பெறுமதியான 2.8 மில்லியன் tickets கடந்த வருடம் வழங்கப்படப்பட்டிருக்கின்றன. பின்னர் அதில் 138,000 tickets ரத்துச் செய்யப்படப்பட்டிருக்கின்றன,

## Grey Cup முத்திரை

Rogers Centre ல் நவம்பர் மாதம் 25ம் திகதி நடந்த கால்பந்தாட்டத்தில் Calgary Stampeders உடன் விளையாடிய Toronto Argos 100வது Grey Cup ஐ வென்றுள்ளது. Argosவின் வெற்றியைக் கொண்டாட முதலாவது Grey ஊரி முத்திரை ஒன்றை Canada Post, வெளியிடுகிறது. இந்த முத்திரைகள் புதன் கிழமை முதல் கிடைக்கும்.

## இனி யார் மேயர்?


NDP MP Olivia Chow, சூதாட்டத்துக்கு எதிராகப் போரிடுபவரான Trinity-Spadina தொகுதி நகர சபை அங்கத்தவர் Adam Vaughan, வானொலித் தொகுப்பாளரும் முன்பு ஒரு முறை மேயர் பதவிக்குப் போட்டியிட்டவருமான John Tory போன்றோர் Rob Fordஐப் பிரதியீடு செய்யும் மேயர் பதவிக்காக களத்தில் குதிக்கவிருக்கிறார்கள்.

## புலிகளின் வெளிநாட்டுச் சொத்து 10 ஆயிரம் கோடி!

விடுதலைப்புலிகளுக்கு சொந்தமான வெளிநாட்டு சொத்துக்களின் பெறுமதி ஒரு பில்லியன் டொலர்கள்(10 ஆயிரம் கோடி ரூபா) என விடுதலைப்புலிகள் அமைப்பின், ஆயுத விநியோக வலையமைப்பின் முன்னாள் தலைவர் கே.பி. என்ற குமரன் பத்மநாதன், இலங்கை அரசாங்கத்திடம் தெரியப்படுத்தியுள்ளார்.

கனடா, சுவிசர்லாந்து, மலேசியா, பிரித்தானியா, நோர்வே, பிரான்ஸ், சுவிடன், ஜெர்மனி ஆகிய நாடுகளில் இந்த சொத்துக்கள் இருக்கின்றன. இவற்றில் அதிகளவான சொத்துக்கள் கனடாவில் உள்ளன. பல்பொருள் அங்காடிகள், உணவ கங்கள், வாகன விற்பனை நிலை யங்கள், லீசிங் நிறுனங்கள் என பல்வேறு வர்த்தக நிலையங்கள் இந்த சொத்துக்களில் அடங்குவதாக தெரியவந்துள்ளது. இந்த வர்த்தக நிறுவனங்கள் விடுதலைப்புலிகளின் செயற்பாட்டாளர்களின் பெயர்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. 30 வீதமான சொத்துக்களின் பங்குகள் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான அமைப்புகளுக்கு கிடைப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

# மத்திய அரசுக்கு தி.மு.க. ஆதரவளிக்காது! ஆனால் ஆதரவளிக்கும்



சில்லறை வர்த்தகத்தில் நேரடி அன்னிய முதலீட்டு விவகாரத்தில் மத்திய அரசுக்கு தி.மு.க., ஆதரவு அளிக்கும் என தி.மு.க., தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார். இவ்விஷயத்தில் மத்திய அரசு கவிழாமல் இருக்கவே இந்த கசப்பான முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பார்லிமென்ட் குளிர்காலக் கூட்டத்தொடர் இம்மாதம், 22ம் தேதி துவங்கியது. கூட்டம் துவங்கிய முதல்நாளில் இருந்தே, சில்லறை வர்த்தகத்தில் நேரடி அன்னிய முதலீடு உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக பாராளுமன்றத்தில் கடும் அமளி ஏற்பட்டது. பல்வேறு முக்கிய மசோதாக்களை நிறைவேற்ற வேண்டியிருப்பதால், இந்தக் கூட்டத்தொடரை, சுமுகமாக நடத்த, மத்திய அரசு திட்டமிட்டு, பகீரத பிரயத்தனம் மேற்கொண்டிருக்கிறது. சில்லறை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீட்டை, மத்திய அரசு அனுமதித்ததை எதிர்த்து, விவாதத்துடன் கூடிய, ஓட்டெடுப்பு நடத்த வேண்டும் என்ற நோட்டீசை, இடதுசாரி கட்சிகள் அளித்துள்ளன. ஏற்கனவே கருணாநிதி, "சில்லறை வர்த்தகத்தில் அன்னிய முதலீடு அனுமதிக்கு, தி.மு.க., ஆதரவு அளிக்காது" என, திட்டவட்டமாகக் கூறியிருந்தார்.

இந்நிலையில், கடந்த சனிக்கிழமையன்று சென்னை சி.ஐ.டி., காலனியில் உள்ள தி.மு.க., தலைவர் கருணாநிதியின் வீட்டிற்கு சென்ற மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத், தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன், முன்னாள் காங்., தலைவர் தங்கபாலு ஆகியோர் அவருடன் பேச்சு நடத்தினர். அப்போது, ராஜ்யசபா எம்.பி., கனிமொழியும் உடனிருந்தார். சில்லறை வர்த்தகத்தில், அன்னிய நேரடி முதலீடு விவகாரம் தொடர்பாக, பாராளுமன்றத்தில் , வாக்கெடுப்புடன் கூடிய விவாதம் கொண்டு வரப்பட்டால், மத்திய அரசுக்கு ஆதரவாக தி.மு.க., வாக்களிக்க வேண்டும் என, குலாம் நபி ஆசாத் கேட்டுக் கொண்டார். அப்போது அதற்கு கருணாநிதி, எந்த உத்தரவாதமும், உறுதியும் அளிக்கவில்லை. மத்திய அரசின் சில கொள்கை முடிவுகளில், தி.மு.க.விடம் கலந்தாலோசிக்கவில்லை என்ற வருத்தத்தை, குலாம் நபி ஆசாத்திடம், கருணாநிதி வெளிப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.



இந்நிலையில், இன்று தி.மு.க., தலைவர் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில், சில்லறை வர்த்தகத்தில் நேரடி அன்னிய முதலீட்டை அனுமதிக்கும் மத்திய அரசின் முடிவை தி.மு.க., ஏற்கவில்லை. அதை எதிர்க்கிறது. இந்நிலையில், பா.ஜ., உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கோருவது போல, விதி எண் 184ன் கீழ் ஓட்டெடுப்புடன் கூடிய விவாதம் நடந்தால் அதன் காரணமாக மத்திய அரசு கவிழக்கூடிய வாய்ப்பை மறுப்பதற்கில்லை. அதன் விளைவாக மத்தியில் பாரதிய ஜனதா கட்சியோ அல்லது அதன் ஆதரவு பெற்ற கட்சியோ ஆட்சிக்கு வருமானால், இன்னும் எத்தனை ஸ்பெக்ட்ரம் ஊழல் புகார் கள், பாபர் மசூதி இடிப்பு, கரசேவை, சிறுபான்மையினருக்கு எதிரான செயல்கள் என மதவாத பயங்கரங்கள் ஏற்படும் என்பதை எண்ணிப்பார்த்து, அத்தகைய மதவாத அரசோ, ஊழல் பீதிகளை கிளப்பி வஞ்சக வலையில் மக்களை சிக்க வைக்கும் அரசோ வந்து விடக்கூடாது என்பதற்காக மத்தியில் தற்போது ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு நீடிக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகிறது. மாநிலங்களைப் பொறுத்தவரையில் மத்திய அரசு அன்னிய முதலீட்டை அனுமதிப்பது தொடர்பாக எடுத்த முடிவு கட்டாயப் படுத்தப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டிருப்பதால், தமிழகத்தைப் பொறுத்தவரையில் சில்லறை வியாபாரிகளுக்கும், விவசாயிகளுக்கும் எத்தகைய இடையூறும் வராது என்ற நம்பிக்கையில் இவ்விஷயத்தில் ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், மத்திய அரசுக்கு தி.மு.க., ஆதரவளிக்க முடிவு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.


SUPER SAVINGS
Throughout The Store
Memory Foam Mattress
UP TO 40% OFF
4 Pc Sofa Set W/Coffee Table
Bonded Leather
$899
$399
Memory Foam Mattress
From
$999
Lowest Price Guaranteed
Colour Choices Available
Bonded Leather
Sectional Sofa
$949
Bonded Leather
$999
Double Bed
From
$349
Bonded Leather
$1199
3 Pc Sofa Set W/5/Recliners
Top Grain 100% Genuine Italian
Leather Sectional Sofa W/ 4 RECLINERS
$2399
Complete Bedroom Set
$899
Complete Bedroom Set
$1199
Bonded Leather
$999
3 Pc Sofa Set
$299
$949
Complete Bedroom Set
$999
7pc Dinette
$599
Italian Wardrobe
$599
$139
Single
Folding Bed
$149
Futon Bed
$499
Bench
$299
$99
$109
$199
$299
Sunflowers
furniture
3024
KENNEDY RD.
416.609.8556

# கற்றலோனியாவில் கருத்துக்கணிப்பு?



*CIU party candidate for Catalunya's regional government Mas and his wife*

இந்தவாரம் ஸ்பெயினின் கற்றலோனியாப் பிரதேசத்தில் நடந்த தேர்தலில் பிரிவினையை ஆதரிக்கும் கட்சிகளுக்கு சுமார் மூன்றில் இரண்டு பங்கு ஆசனங்கள் கிடைத்துள்ளன. இதனால் ஸ்பெயினிலிருந்து பிரிந்து செல்வதற்கான கருத்துக்கணிப்பு ஒன்று கற்றலோனியாவில் நடைபெறுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆனாலும் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்காததால் ஒருவித குழப்பநிலைமை அங்கு காணப்படுகிறது. எவ்வாறாயினும் பிரிந்து செல்வதற்கான கருத்துக்கணிப்பு ஸ்பெயினில் சட்டரீதியாகச் செல்லாது.

135 மொத்த ஆசனங்களில் ஆளும் வலதுசாரி CiU கட்சி 50 ஆசனங்களுடன் அதிகூடிய ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. சிக்கனப் பொருளாதார நடவடிக்கைகளைப் பின்பற்றியதால் அவர்களின் ஆசனங்கள் 61இலிருந்து தற்போது குறைந்துவிட்டது. இந்நடவடிக்கைகளை எதிர்க்கும் இடதுசாரிக்கட்சியின் ஆசனங்கள் 10இலிருந்து 21ஆக அதிகரித்துள்ளன. பொருளாதாரம் சம்பந்தமாக பிரிவினையை ஆதரிக்கும் கட்சிகளிடையே ஒருமித்த கருத்து இல்லை.

ஸ்பெயினிலுள்ள 17சுயாட்சிப் பிரதேசங்களில் சுதந்திரவேட்கை கற்றலோனியாவிலும் பாஸ்க் பிரதேசத்திலும் மிகவும் தீவிரமாகவுள்ளது. கற்றலோனியா ஸ்பெயினின் செல்வவளமிக்க பிரதேசமாகும். ஆனால் மாநிலம் ஸ்பெயினின் கடன் கூடிய பிரதேசமாகும். ஸ்பெயின் தற்போது மோசமான பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்குகிறது. அங்கு வேலையின்மை 25வீதமாகக் காணப்படுகிறது.

கற்றலோனியாவின் சனத்தொகை 7.5மில்லியனாகும். ஸ்பெயினின் வடகிழக்கு மூலையிலுள்ள கற்றலோனிய மக்கள் தெற்கு பிரான்சிலுள்ள மக்களுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்கிறார்கள். 1931இல் ஸ்பெயின் குடியரசாக வந்தவுடன் கற்றலோனியாவிற்குப் பரவலான சுயாட்சி வழங்கப்பட்டது. பின்னர் நடந்த உள்நாட்டு யுத்தத்தில் குடியரசுப்பக்கம் உறுதியாக நின்ற கற்றலோனியா, ஃபிறாங்கோவின் சர்வாதிகார ஆட்சியில் அடக்குமுறையை எதிர்கொண்டது. அப்போது சுயாட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதோடு கற்றலன் மொழி உபயோகமும் கட்டுப்படுத்தப்பட்டது. ஃபிறாங்கோவின் மரணத்தின்பின் ஏற்பட்ட ஜனநாயக எழுச்சியுடன் மீண்டும் கற்றலோனியா மக்கள் சுயாட்சியை அனுபவிக்கத் தொடங்கினர். தாம் மத்தியிலுள்ள மாட்றிட்டிற்கு நிறையவரி செலுத்துவதாகவும் அங்கிருந்து கற்றலோனியா பெறுவது குறைவெனவும் கற்றலோனியா மக்கள் நினைக்கிறார்கள். ஸ்பெயினின் ஒரு மாகாணமாக இருப்பதைவிட ஐரோப்பியயூனியனின் ஒரு அங்கத்தவராக இருப்பதன்மூலம் தங்களுக்கு முன்னேற்றமான வாழ்வு கிடைக்குமென தேசியவாதிகள் வாதிக்கின்றனர். அங்கு 50வீதமான மக்கள் பிரிவினையை ஆதரிப்பதாக கருத்துக்கணிப்புக்கள் கூறுகின்றன.

# மாக் கார்னி இங்கிலாந்து வங்கியின் கவர்னராகிறார்!

கனடிய மத்திய வங்கியின் கவர்னர் மாக் கார்னி இங்கிலாந்து மத்திய வங்கியின் கவர்னராக 2013 யூனில் பதவியேற்கிறார். 5வருடம் அவர் பதவி வகிப்பார். 47வயதான கார்னி பிரித்தானிய குடியுரிமைக்கு விண்ணப்பிக்க இருக்கிறார். அவருடைய மனைவி ஏற்கனவே கனடிய பிரித்தானிய இரட்டைக் குடியுரிமை வைத்திருக்கிறார்.

கார்னி ஹார்வாட் மற்றும் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகங்களில் படித்தவர். இவருக்கு வருடம் 624,000 பிரித்தானியப் பவுண்கள் ஊதியம் கிடைக்கும் எனப் பீபீசி தெரிவித்துள்ளது.

# பிரதம நீதியரசரைப் பதவியிறக்கும் அரசின் முயற்சியும் அதிகரித்து வரும் அதிதிருப்தியும்!

விலைவாசி அதிகரிப்பு, இசட் வெட்டுப் புள்ளி (Z-Score), ஊழல் மோசடி, வெள்ளை வேன் ஆட்கடத்தல், கொலை போன்ற விடயங்களினால் அரச தரப்பின் மேல் ஏற்பட்டிருந்த வெறுப்பும் அதிதிருப்தியும் பிரதம நீதியரசரைப் பதவியிறக்க அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளினால் மேலும் அதிகரித்து வருவதையே உணரக் கூடியதாகவுள்ளது. மேலும் அரசின் இந்நடவடிக்கை நீதித் துறைக்கும் பாராளுமன்றத்திற்குமிடையிலான ஒரு பெரிய இடைவெளியை ஏற்படுத்தி வருவதாகவும் பாரிய முறண்பாட்டை உருவாக்கியிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இந்நடவடிக்கைக்கு அரச தரப்பினர் மத்தியில் எதிர்ப்பும் ஆட்சேபனையும் இருந்தபோதும் 117 அரச பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது சம்மதத்தை வெற்றுக் கடதாசியில் கையொப்பமிட்டு ஏற்கனவே ஜனாதிபதியிடம் கையளித்துவிட்டதாகக் கூறப்படுகிறது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ பிரதம நீதியரசரைப் பதவியிலிருந்து வெளியேற்றுவதில் கூடிய அக்கறை காட்டி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற விசாரணைத் தெரிவுக்குழுத் தலைவர் மஹிந்த பிரயதர்சன யாப்பா டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு நவலோக வைத்தியசாலையில் இம்மாதம் 22ந் திகதி அனுமதிக்கப் பட்டு உள்ளக நோயாளராகச் சிகிச்சை பெற்று வந்தார். இதையறிந்த அமெரிக்காவிற்கான தனிப்பட்ட பிரயாணத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அங்கிருந்தவாறே பாராளுமன்ற விசாரணைக் குழுத் தலைவர் மஹிந்த யாப்பாவைத் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு அடுத்த நாள் அதாவது 23ந் திகதி பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்காவிற்கு எதிராக நடைபெறவிருந்த பாராளுமன்ற விசாரணைக்கு "அம்புயுலன்ஸ்"வண்டியிலேனும் சரி, கையில் "சேலைன்" போத்தலை ஏந்தியவாறேனும் சரி தவறாமல் செல்லுமாறு கட்ட ளையிட்டதாகவும் அதற்கு இணங்கிய குழுத் தலைவர் யாப்பா தான் வைத்திய ஆலோசனைக்கு எதிராக வெளியில் செல்வதாகக் கூறிக் கையொப்பமிட்டு வைத்தியசாலையை விட்டு வெளியேறியதாகவும் இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள இணையத்தளங்களில் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக் குழு விசாரணைக்கு முதல் நாளான 22ம் திகதி, புதுக்கடையில் அமைந்துள்ள நீதி மன்ற வளாகத்திற்கு அருகில் இலக்கத் தகடுகளற்ற வெள்ளை நிற வேன் ஒன்றில் வந்தவர்கள் சிலரால் நீதியரசர் சிறாணி பண்டாரநாயக்காவிற்கு எதிரான 20 பக்கங்களைக் கொண்ட பிரசுரமொன்று வினியோகிக்கப் பட்டதாகவும் அங்கு கடமையிலிருந்த காவல் படையினர் வெறுமனே பார்த்துக் கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. மேலும் நேற்று திங்கட்கிழமை (26.12.2012) காலை பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கா, அவரது கணவர் முன்னாள் தேசிய சேமிப்பு வங்கித் தலைவர் பிரதீப் காரியவசம் மற்றும் நீதிச் சேவை ஆணைக்குழுவின் தலைவர் மஞ்சுள செனவிரட்ன ஆகியோரின் படங்களைக் கொண்டு தனிப்பட்ட மற்றும் பொது வாழ்க்கை தொடர் பில் அவதூறாக சிங்களத்தில் எழுதப்பட்ட ஒரு மூடை 30 பக்கங்களைக் கொண்ட பிரசுரங்கள் உயர் நீதி மன்ற நுழைவாயிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. இது அரசாங்கத்தின் வேலை என்று மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர். உச்ச நீதி மன்றில் பிரதம நீதியரசரைப் பதவியிறக்கும் தீர்மானத்திற்கெதிராகவும், பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கெதிராகவும் பல்வேறு வழக்குகள் தொடரப் பட்டு நிலுவையிலுள்ள நிலையில் உச்ச நீதி மன்றம் பிரதம நீதியரசருக்கெதிரான பாராளுமன்ற தெரிவுக்குழு விசாரணயை தாமதிக்குமாறு அரசை அறிவுறுத்தியிருந்தும் அரசு அதைச் சட்டை செய்யாது உதாசீனம் செய்துவிட்டுத் திட்டமிட்டாற்போல் விசாரணயை கடந்த 23ம் திகதி முன்னெடுத்தது. இவ்விசாரணைக்குச் சமூகமளிப்பதற்காக உயர் நீதி மன்றத்திலிருந்து பாராளுமன்றத்திற்குப் புறப்பட்ட உயர் நீதியரசர் கரகோசத்தின் மத்தியில் "ஜயவேவா" கோ'த்துடன் அங்கு குழுமியிருந்த வழக்குரைஞர்களாலும், பொதுமக்களாலும் வழியனுப்பி வைக்கப் பட்டார். ஆனால் பாராளுமன்றத்திற்குச் சென்ற அவருக்கோ ஒரு துளி மரியாதையேனும் அங்கு காவலில் ஈடு பட்டிருந்த போலீஸ் படைப் பிரிவினராலோ அல்லது மற்றையவர்களாலோ வழங்கப் படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதம நீதியரசர்மேல் சாட்டப் பட்ட குற்றச் சாட்டுகளுக்கு மறுதலிப்பு வழங்க கால அவகாசம் கோரப்பட்ட போது 7 நாட்கள் மாத்திரமே வழங்கப்பட்டதாகவும் எதிர்வரும் 30ம் திகதிக்கு முன்னர் எழுத்து மூல மறுதலிப்பை பாராளுமன்ற தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்க அறிவுறுத்தப் பட்டுள்ளதாகவும் மறு விசாரணை அடுத்த மாதம் 4ம் திகதி நடை பெறுமெனவும் ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. மேலும் சில ஊடகங்கள் பாராளுமன்றத் தெரிவுக் குழு ஏற்கனவே தயாரிக்கப் பட்ட தீர்ப்பை வருகிற மாதம் 8ம் திகதி வழங்குமெனவும் இதனால் பிரதம நீதி யரசர் பதவியிழக்க நேரிடும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளன. இதன் இடையே சில அரச சார்பற்ற நிறுவனங்கள் நீதித் துறைக்கும், அரசாங்கத்திற் கும் இடையில் உருவாகிவரும் முறண்பாட்டைச் சுமுகமாகமான முறை யில் தீர்த்துக் கொள்ளுமாறு அரசாங்கத்தையும் நீதித்துறையையும் வினய மாக வேண்டியுள்ள போதிலும் முறுகு நிலை அதிகரித்து வருவதையே காணக்கூடியதாக உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க பிரதம நீதியரசரின் பதவியிறக்கல் முயற்சிக்கு ஆட்சேபனை தெரிவித்திருக்கும் அதேவேளை ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் அனுர திசாநாயக்க இந்நடவடிக்கை அரசின் ஒரு பழிவாங்கலேயன்றி உண்மைக்கும், நீதி, நியாயத்திற்கும் புறம்பானது எனத் தெரிவித்துள்ளார். இந்நிலையில் ஏதிர்வரும் தினங்களில் இங்கு அரசிற்கெதிராக அதிகளவிலான ஊர்வலங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் எதிர்பார்க்க முடியுமென எதிர்வு கூறப்படுகிறது.

-எம்.ஐ.எம்.எஸ்.அன்வர்-

# அம்மாவின் ஆசை

-முகுந்தன்-

க்ரீங்.. க்ரீங்...க்ரீங் ..க்ரீங்... உதாரிப்ப எடுக்கினம் என்றவாறு காயத்ரி, ஹலோ... ஹலோ.. என்றாள்.
அக்கா.. நான் நந்தினி ..
சொல்லு நந்தினி.. என்ன இந்த நேரத்தில..
இல்லையக்கா.. அம்மா பிரடிபட கிணத்தடியில விழுந்திட்டா, ஆஸ்பத்திரியில வச்சிருக்கிறம். கொஞ்சம் சீரியஸ் ஆக இருக்கு.உங்களையும் பிள்ளையையும் நெடுக கேட்டுக்கொண்டிருக்கிறா. என்ன செய்ய.. நான் வாறதே நந்தினி ...உங்க ஒரு பிரச்சினையும் இல்லையே?
பிரச்சினை பிரச்சினை எண்டு உங்கயிருக்கிற நீங்கள் தான் கத்திக்கொன்டிருக்கிறீங்கள். ஒண்டும் நடக்காது பிள்ளையையும் கூட்டிக்கொண்டு கெதியாக வாங்கோ.

என்ன.. பிள்ளையையும் கூட்டிக் கொண்டோ? அவன்.. இங்க.. தெரியும் தானே..


அக்கா அதொரு பிரச்சினையுமில்லை கூட்டிக்கொண்டு வாங்கோ. உங்க சந்திவளிய கொடி பிடிச்சு.. தெருக்களை மறிச்சவங்கள் எல்லாம் இங்க வந்து நல்லா சகலத்தையும் அனுபவிச்சுப்போட்டு போறாங்கள். பேசாமல் கூட்டிக்கொண்டு வாங்கோ, அவனுக்கு வேலைக்கு லீவை போட்டுட்டு.

சரி, அம்மாவை கவனமாக பார், நான் வாறன் ராசா.. ராசா...
என்னம்மா நிம்மதியாக நித்திரை கொள்ளவும் விடமாட்டீங்கள்.
ராச அம்மம்மா கிணத்தடியில விழுந்து ஆஸ்பத்திரியிலயாம். எங்களை கேட்டுக்கொண்டே இருக்கிறாவாம். நாங்கள் சிலோனுக்கு போக வேணும். உன்னையெல்லாம் தூக்கி வளர்த்தவ எல்லே செல்லம். உனக்கு அறுனாக்கொடி எல்லாம் செய்து தந்தா what is that? என்னம்மா விசர்க்கதை கதைக்கிறீங்கள்? என்னண்டம்மா சிலோனுக்கு நாங்கள் போறது? வெளிநாட்டில இருந்து போற ஆட்களை வெள்ளை வானிலை கடத்துறாங்கள். காசு பறிக்கிறாங்கள் எண்டெல்லாம் பேப்பர்ல வருகுது. அதோட நாங்கள்.. இங்க.. நான் நந்தினி சித்தியோட கதைச்சனான். அவ சொல்லுறா இங்க கதைக்கிற மாதிரி ஒண்டும் இல்லையாம். அம்மம்மாக்கும் ஏதன் நடந்தாலும் நடக்குமாம். அதுதான் போவமெண்டு நினைக்கிறன்.

> **“சரியம்மா.. இப்ப வந்திட்டன் தானே... சும்மா இருங்கோ”. வந்திட்டாய், திரும்பி போகத்தான் போறீங்கள். இருக்கவே வந்தனீ? உபிடித்தான் தங்கம்மா அக்காவும் முந்தி வந்தாள். “இது எங்கட சொந்த மண்.. இங்க தான் சாகப்போறன் எண்டாள்”. பேந்து பார்த்தால் மாங்குளத்து காணியை இவன் சுந்தரம் கேக்க கேக்க குடுக்காமல் யாரோ சிங்கள ஆளுக்கு அம்பதினாயிரம் ரூபாய்க்கு வித்துட்டு சொல்லாமல் கொள்ளாமல் ஓடிட்டாள்.**

சரி.. நான் அப்ப “டிக்கெட்” அலுவலை பார்க்கிகிறன் .என்னவோ உங்களுக்காகத்தான் வெளிக்கிர்றன்.
பயப்பிடாதே ராசா.. வயல்வெளி வைரவர் எங்களுக்கு ஒண்டும் வர விடமாட்டார்.

அம்மா, உதை மட்டும் எனக்கு சொல்லாதயுங்கோ. நீங்கள் வேணுமெண்டா வைரவர், சூலம், தேங்காய், மாங்காய் எல்லாத்தையும் வைச்சு கும்பிடுங்கோ. எனக்கெண்டா உதில நம்பிக்கையில்லை. ஆர் ஆரையோ எல்லாம் அழிக்கவேணும் எண்டு நேர்த்தி வச்சீங்கள். கடைசியாக என்ன நடந்தது ?
ராசா.. வைரவரைப்பற்றி ஒண்டும் பேசாத.. டிக்கட் அலுவல போய் பார்




கொழும்புக்கு இன்னும் எவ்வளவு நேரம் இருக்குது ராசா கொழும்புக்கு இன்னும் ஒரு மணித்தியாலம் இருக்கு தம்மா. கொழும்பு நெருங்க நெருங்க வயித்த கலக்குது ராசா வயித்த கலக்குதோ? சும்மா வீட்ட இருந்துகொண்டு நாசமறுத்த டீவியளையும் ரேடியோக்களையும் கேட்டுவிட்டு பொடியள் கலக்குறாங்கள் கலக்குறாங்கள் எண்டு கத்திப்போட்டு இப்ப வயித்த கலக்குது எண்ணுறியள். சும்மா எந்த நேரமும் வீட்டில சண்ட.. சண்ட கொலை கொலை எண்டு கதைச்சு என்னையும் அளிச்சுப்போட்டீங்கள். என்ன செய்யப்போறாங்களோ எனக்கெண்டா தெரியா. நீங்கள் முன்னுக்கு போங்கோ.. நான் பின்னால வாறன் விமான நிலையத்தில் இருந்த அதிகாரியிடம் சென்ற காயத்ரி அனைத்து பற்களும் தெரியக்கூடிய வகையில் சிரித்துக்கொண்டு, ஆயுபோவன்.. என்றதும் வணக்கம் எத்தனை நாள் நிக்கிறியள்? என்று பதில் வந்தது.

தம்பி தமிழே? நாங்கள் இரண்டு கிழமை என்னம்மா.. இங்க தமிழ் ஆக்களுக்கெல்லாம் சிங்கள அரசாங்கம் வேலைக்கெடுக்க மாட்டினம் எண்டு சொன்னீங்கள்? என்றான் ராசா
சும்மா பேசாமல் வா... ஒரு கண்டம் தாண்டீட்டம்.. பேந்து கதைப்பம்.

சும்மா ஆக்களுக்கு காட்டுறதுக்காக வச்சிருக்கிறாங்கள். (இவர்கள் சென்று கொண்டிருந்த பஸ் ஓமந்தையில் நிற்கிறது. omanthai என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்ததை ராசா வாசிக்கின்றார்) எந்த இடம் தம்பி இது? ஓமாந்தாய் அம்மா..

என்ன தம்பி ஓமாந்தாய் யோ?
அருகிலிருந்த பெரியவர், இது ஓமந்தை. ஆமி செக் பண்ண போகுது என்றார். மீசை முளைத்ததும் முளைக்காததுமாயுள்ள இரு இராணுவ வீரர்கள் உள்ளே ஏறினார்கள்.
அம்மா எங்க வாறது? என்று ராணுவ வீரர் கேட்டதும், என்னத்தையாட இவன் கேட்கிறான் என்று மனதுக்குள் புகைந்துகொண்ட காயத்ரி, கனடாவிலிருந்து வாறம், யாழ்ப்பாணம் போறம் என்று சொல்லிக்கொண்டு மரியாதை கலந்த அச்சத்துடன் எழும்பியதும் இரிங்க.. இரிங்க.. என்று ராணுவ வீரன் பதிலளித்தான் காண்டம் இரண்டு முடிஞ்சுது.. இனி சாவகச்சேரி தான் என்ற நிம்மதியுடன் இருவரும் பயணிக்கின்றனர். சாவகச்சேரியை பஸ் அடைந்ததும் அடையாததுமாக இருவரும் நந்தினியுடன் தாயை பார்க்கச் சென்றனர். தாயின் நிலைமை எவ்வாறு இருக்குமோ என்ற ஏக்கத்துடன் சென்ற காயத்ரி சாவகச்சேரி ஆஸ்பத்திரியை கண்டதும் மலைத்துப்போய்விட்டாள். தான் பிறந்து வளர்ந்த சாவகச்சேரியா இது என அங்கலைக்கலானாள். முப்பது வருடங்கள் யுத்தத்தை எதிர்கொண்ட நாட்டிலா இப்படியொரு ஆஸ்பத்திரி என ஆச்சரியப்பட்டாள்.

தான் வசித்து வருகின்ற ஸ்கா பரோ நகரத்தில் உள்ள ஆஸ்பத்திரிகள் நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் இருப்பினும், இந்த ஆஸ்பத்திரியைப்போல் இவ்வளவு காற்றோட்டமுள்ளதாகவும், மரம் செடி கொடிகளுடனும், புதுப்பொலிவுடனும் இல்லை.

தாயின் கட்டிலுக்கு அண்மையில் சென்ற நந்தினி, அம்மா.. அம்மா அக்கா வந்திட்டா என்றதும் தாயின் கண்கள் மெதுவாக திறந்தன. கடைக்கண்ணால் கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

காயத்ரி, இனி நான் இருக்க மாட்டேன். பிள்ளை, சண்டை முடிஞ்சு உன்னையெல்லாம் இப்படி பார்ப்பேன் எண்டு நான் நினைக்கேல்ல. நாங்கள் பட்ட கஷ்டம் அலைஞ்ச அலைச்சல் எல்லாம் உனக்கு தெரியாது. காசை அனுப்பி போட்டு நீங்கள் வசதியாக இருந்திட்டியள். நீங்கள் ஒருத்தரும் இங்க இனி வரவும் மாட்டியள்.

சரியம்மா.. இப்ப வந்திட்டன் தானே... சும்மா இருங்கோ வந்திட்டாய், திரும்பி போகத்தான் போறீங்கள். இருக்கவே வந்தனீ? உபிடித்தான் தங்கம்மா அக்காவும் முந்தி வந்தாள். இது எங்கட சொந்த மண்.. இங்க தான் சாகப்போறன் எண்டாள். பேந்து பார்த்தால் மாங்குளத்து காணியை இவன் சுந்தரம் கேக்க கேக்க குடுக்காமல் யாரோ சிங்கள ஆளுக்கு அம்பதினாயிரம் ரூபா கூட வித்துட்டு சொல்லாமல் கொள்ளாமல் ஓடிட்டாள்.

அம்மா உந்த கதையளை விடுங்கோம்மா உதுகள் உங்களுக்கு பிடிக்காது தான். தெரியும். உன்னை பெத்தவள் எண்டபடியாலும் இந்த சனத்திண்ர அவலத்தை கண்டு அனுபவிச்சபடியாலும் சொல்லுறன்.. சனம் இங்க ஓரளவுக்கு நிம்மதியாக இருக்கினம். மீன் பிடிக்க போன அந்தோனி பாதுகாப்பாக திரும்பி வருவான் என்ற நிம்மதியோட மரியாம்மா நித்திரைக்கு போகும் நிலை மை இங்க இருக்கு. வயலுக்கு போன வைரமுத்து உயிரோட வாற நிலைமை இங்க இருக்கு. பள்ளிக்கு போற குழந்தைகள் பாதுகாப்பா வருவினம் எண்ட நிலைமை இங்க இருக்கு.

தயவுசெய்து உங்க இருந்துகொண்டு இங்க உள்ளவையை குழப்பாதயுங்கோ. உண்மையில எதாவது உதவி செய்ய நினைச்சா அனாதைப்பிள்ளையளை படிப்பியுங்கோ.

இயக்கத்துக்கு போன குற்றத்துக்காக கையை காலை இழந்து நிற்கிற எங்கட பிள்ளையளுக்கு உதவி செய்யுங்கோ என்று கூறிவிட்டு..
மேலும் ஏதோ சொல்ல முற்பட்ட வேளை அவளது தலை தலையணை

மேல் சரிந்துகொண்டது ●

# மாய உலகத்து மந்திரக் கோல்

## திரைக்கதை நுட்பங்கள்-3

பாஸ்கி ரி.ராஜ்



ஒரு நாடகத்தில் வசனத்தின் பங்கு 80 வீதமும் காட்சியின் பங்கு 20 வீதமுமாயிருக்க, ஒரு நல்ல திரைப்படத்தில் காட்சியின் பங்கு 80 வீதத்துக்கு மேலாகவும் வசனத்தின் பங்கு 20 வீதத்துக்கு குறைவாகவும் இருப்பதே நல்லது.

இங்கு ஒன்றை மட்டும் குறிப்பிடுவது அவசியம். எம் தமிழ்த் திரைப்படங்களில் நாடகத்தின் செல்வாக்கின் பாதிப்பு இன்னும் முழுமையாக நீங்கவில்லை. கமெராவின் மொழிமீது இன்னும் தமிழ் சினிமாவுக்கு முழுமையான நம்பிக்கை வரவில்லையென்பது இதற்கு காரணமாயிருக்கலாம்.

சென்ற தடைவ எதில் விட்டோம்? ஆ, பாட்டி வடைசுட்ட கதையில்! அதாவது புத்தகக்கதை, நாடகம், திரைக்கதை ஆகியவற்றின் வேறுபாடுகளை இப் பாட்டிக் கதையை உதாரணமாக வைத்துப் பார்த்திருக்கிறோம். நாம் எடுத்துக்கொண்டது திரைக்கதை. அதனால் திரைக்கதையைப் புரிந்துகொள்ளும் கோணத்தில் மட்டும் இவற்றை ஒப்பிடுவோம்.

### பகைப் புலம்

பாட்டி கதையிலிருந்து புரிந்து கொண்டவற்றைத் தாண்டி ஒரு பிரதானமான வேறுபாட்டை நாம் முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும். புத்தகக்கதைக்கும் திரைக்கதைக்கும் உள்ள ஒரு பிரதான வேறுபாடு பாத்திரமும் பகைப்புலமும் சம்பந்தமானது. பகைப்புலமென்பது பிரச்சினைக்கான களம் - கதை நிகழும் இடம, காலம், பிரச்சினையின் பின்னணி, பாத்திரங்களின் தன்மை, பிரச்சினையை மையமாகக்கொண்ட அவற்றுக்கிடையே உருவாகியுள்ள உறவுநிலைகள், யாவும் சேர்ந்த ஒன்று.

புத்தகக்கதையில் ஏற்கெனவே விரிந்திருக்கும் பகைப்புலமொன்றில் பாத்திரங்கள் உலவுவதாகத் தெரியும். ஒரு ஊரிலே ஒரு பாட்டி என்று கதை விரிந்தால். அங்கு ஊர், வாழ்நிலை, உறவுகள் என்று எம்முன் விரிந்திருக்கும் பகைப்புலத்தில் பாட்டி எனும் பாத்திரம் உலவுவதாகக் காண்போம். ஆனால் திரைக்கதையிலோ, பாத்திரங்களின் நகர்வால்தான் பகைப்புலமே விரியும். ஒரு அடுப்பு - அதன்முன் பாட்டி ..அவள் பின்புறத்தில் அரைகுறையாய்த் தெரியும் கிராமத்து வீடு (அதற்குமேல் இப்போதைக்குத் தேவையில்லை) என விரிவது திரைக்கதை. அதாவது பாட்டியும் அவளது நகர்வும்தான் உங்களுக்கு அவளது பிரச்சினைக்கான களம், சூழல், வாழ்க்கைத் தரம், உறவுகள், கொண்ட பகைப்புலத்தைப் படைத்துச் செல்லும். சுருங்கச் சொன்னால், தூரத்தே ஒரு முழுப் பாலத்தில் ஒருவர் நடப்பதைப் பார்ப்பது புத்தகக்கதையென்றால், ஒவ்வொரு காலடிக்கும் கீழ் பாலமொன்று உருவாகிச் செல்வது போன்றது திரைக்கதை.

இதன் அர்த்தம் புத்தகக்கதையில் நுண்பார்வை இல்லை என்பதல்ல. ஒரு சிறு மன அசைவையே பக்கம்பக்கமாக நீளும் சிறுகதையாக எழுதவும் முடியும். ரஞ்சகுமாரின் மோகவாசலில் வரும் சுருக்கும் ஊஞ்சலும் சிறுகதை ஞாபகம் வருகிறது. ஒரு பெண் வந்து போகிறாள். அதுவரை சடமாய்க் கிடந்த உலகம் அப்படியே உற்சாகக் களமாகிவிடுகிறது கடைக்காரப் பையனுக்கு. இருக்கட்டுமே. இதைத் திரைப்படமாக்குவதானாலும் பாத்திரத்தின் மூலம் தான் பகைப்புலம் புலப்பட வேண்டும். அவனின் மனச் சோர்வையோ, மனக்கிளர்ச்சியையோ, சோர்விலிருந்து கிளர்ச்சிக்கான மாற்றத்தையோ, சிறுகதையில் பக்கம் பக்கமாக விபரித்தாலும் - திரைப்படத்தில் பாத்திரத்துடன் தொடர்புறுத்திய சம்பவங்கள் மூலமாகத்தான் காட்சிப்படுத்த வேண்டும். “ஓர் ஊர் காய்ந்து கிடக்கிறது. கடைக்காரப் பையன் சோம்பிக் கிடந்தான்.” என்று புத்தகக்கதையில் எழுதலாம். ஆனால்



Film: Omar Mukhtar

திரைக்கதையில், பேனை திறந்தபடியிருக்க, இனிப்புப் போத்தலுள் எறும்பு மொய்க்க, கழன்ற சேட் பட்டனுடன் கல்லாய்ப் பெட்டிக் கதிரையில் சரிந்திருக்கும் ஒரு எண்ணெய் முகப் பையனின் கண்ணூடுதான், கடைத் தாழ்வாரத்தில் கிறுக்கிப்போட்ட காகிதத் துண்டுகள், நடமாற்றமற்ற தெரு, தெருவில் சுருண்டிருக்கும் நாய், என அவனது சோர்வோடு சேரும் சூழலும் புலப்படவேண்டும்.

புத்தகக் கதையின் பகைப்புலத்தை திரைப்படத்தில் எப்படிக் காட்சிப் படுத்துவது என்று புரிந்து கொள்ளாததும் சில திரைப்படங்கள் சோடை போவதற்கு காரணமாகிவிடுகின்றன -குறிப்பாக, நாவல் அல்லது சிறுகதைகளைத் திரைப்படமாக்கும் முயற்சியில்.

புத்தகக்கதைகளில் இஷ்டப்பட்டவாறு எழுத்தால் சித்திரித்துவிடக்கூடிய, எண்ணங்களும், உணர்ச்சிகளும், உணர்வுகளும், திரைப்படத்தில் காட்சிகளாக்கப்பட வேண்டும். மாறிச்செல்லும் காட்சிகளுக்கிடையான தொடர்பில்தான் பார்தறிய முடியாத இக் கூறுகளையும் நாம் காட்சிகளாக அல்லது மறைபொருள் உணர்த்தும் காட்சிகளாகப் பார்க்கவேண்டும். இங்கு வார்த்தைகள் காட்சிளால் உணர்த்த முடியாதவற்றை உணர்த்த உதவும் ஒரு கருவியே. ஆனால் எம் தமிழ்ப் படங்கள் வார்த்தைகளை விளாசியே எல்லாவற்றையும் சாதித்துவிடுவது வேறு கதை. அது நாடகத்திலிருந்து திரைப்படத்துக்குத் தாவியதன் கோளாறு.

இப்போ நான் நாடகம் பற்றிப் பேசவேண்டும். அது திரைப்படத்துக்கு அண்மித்த ஒரு வடிவம். அதனால், நாம் திரைப்படத்தை நாடகம்போல் இயக்கிவிடுகின்ற இயல்பான தவறை பெரும்பாலும் செய்துவிடுகிறோம். எம் ஆரம்பகால, இடைக்கால தமிழ்த் திரைப்பட முன்னணி இயக்குநர்களும் நடிகர்களும் (பாலச்சந்தர், சிவாஜிகணேசன் உட்பட) நாடகத்திலிருந்து திரைக்கு வந்ததும் இதற்குக் காரணமாயிருக்கலாம். அவர்கள் தந்த முன்னுதாரணங்களை எம் ரசிகத் தனத்தின் இலக்கணங்களாக நாம் எடுத்துக்கொண்டதும் மற்றொரு காரணமே.

### காட்சியும் வசனமும்

காட்சி, வசனம் இரண்டுமே நாடத்திலும் திரைப்படத்திலும் இருக்கின்ற பொது அம்சமானாலும், காட்சிக்கும் வசனத்துக்குமான விகிதாசாரம் இரண்டிலுமே வேறு வேறு. ஒரு நாடகத்தில் வசனத்தின் பங்கு 80 வீதமும் காட்சியின் பங்கு 20 வீதமுமாயிருக்க, ஒரு நல்ல திரைப்படத்தில் காட்சியின் பங்கு 80 வீதத்துக்கு மேலாகவும் வசனத்தின் பங்கு 20 வீதத்துக்கு குறைவாகவும் இருப்பதே நல்லது. இந்த 80 சதவீதமான காட்சியும் கூட நாடகம்போல் ஒரே கோணத்திலும் ஒரே தோற்றப் பரிமாணத்திலும் இருப்பதில்லை. அது நிமிடத்துக்கு நிமிடம் மாறும் கமெராக் கோணங்களிலும், எக்ரீம் குளோஸப் முதல் எக்ரீம் லோங் ஷொட் வரையினான பார்வை விசாலங்களிலும் மாறுபடும். இரண்டிலுமே பார்வையாளர்களுக்கான இருக்கைகள் ஒன்றுதான். ஆனால் திரைப்படத்தில் எம்மை அறியாமலே நாம் எத்தனையே ஆயிரக்கணக்கான கோணங்களில் நின்றும் கிடந்தும், புகுந்தும், தவழ்ந்தும், பறந்தும், அமிழ்ந்தும் பார்க்கிறோம். பயங்கர கொட்சிலாவின் வாய்க்குள் புகுந்த நீர்மூழ்கிக் கலத்தின் உள்ளே இருந்து கிழித்துக்கொண்டு வெளிவரும் ஹீரோவையும் பார்ப்போம். தலையில் அடிபட்ட கதாநாயகனின் மூளைக்குள் கோளாறும் நரம்புக் கலங்களையும் காண்போம். ஒருலட்சம் பேர் மோதும் பிரமாண்டமான யுத்தகளத்தைப் பார்த்த கண்ணோடு அங்கே ஒரு வாள்வீச்சில் துண்டித்து விழும் ஒற்றைக்கரத்தையும் அக் கரத்தில் உள்ள மோதிரத்தில் பதித்த ராஜ முத்திரையையும் நுணுகிக் காண்போம். அவற்றை, சிலோ மோஷன் ஃபாஸ்ட் மோஷன், மெதுவாக எழும்பி சரக்கென வெட்டும் வாளின் இரண்டும் கலந்த மோஷன், ஏன் ஸ்டில்லாகி நிற்கும் காட்சிகளாகக்கூடக் காண்போம்.

அதுபோல் திரைப்படத்தில் பங்காற்றும் 20 சதவீத வசனமும்கூட நாடகத்தைப்போல் நீட்டி முழங்குவதாயிருப்பதில்லை. அவசிய காரணங்களைத் தவிர பொதுவாக குறுகிய வசனங்களாக, காட்சியுடன் சேர்ந்து ஒரு செய்தியைப் பரிமாற உதவும் ஒரு துணையம்சமாகவே அது அமைய வேண்டும். “கோடிட்ட இடத்தை நிரப்புக” ரகக் கேள்விபோல், ஆங்காங்கே பொருத்தமான வசனங்களை மட்டும் கொண்டு காட்சிகளின் சித்திரிப்பை முழுமைப்படுத்தும் விதமாகவே வசனங்கள் அமையவேண்டும்.

காட்சியே செய்தியைப் பரிமாறும் இடங்களில் வசனங்கள் தேவையில்லை. சந்தையில் சந்தித்துக்கொண்டு “சந்தைக்கோ வந்தீங்க?” என்று நாம் கேட்க அவரும், “ஆமா, சந்தைக்குத்தான், நீங்களும் சந்தைக்கோ..?” என வினவும் கூத்துப்போலாகிவிடும் அது. திரை வசனங்கள் பற்றி பின்னர் நாம் விரிவாகப் பார்ப்போமாயினும் இங்கு ஒன்றை மட்டும் குறிப்பிடுவது அவசியம். எம் தமிழ்த் திரைப்படங்களில் நாடகத்தின் செல்வாக்கின் பாதிப்பு இன்னும் முழுமையாக நீங்கவில்லை. கமெராவின் மொழிமீது இன்னும் தமிழ் சினிமாவுக்கு முழுமையான நம்பிக்கை வரவில்லையென்பது இதற்கு காரணமாயிருக்கலாம்.

### மூவகை முரண்பாடுகள்.

எல்லாக் கதைகளும் முரண் பாடுகளால்தான் (conflicts) நகர்த்தப்படுகின்றன. இம் முரண்பாடுகள் மூன்று தளங்களில் நிகழலாம்.

முதலாவது தளம்: Inner conflicts- உள் முரண்பாடுகள். அதாவது ஒரு பாத்திரத்தின் உள்ளே, அதன் தனிப்பட்ட உடல், உளம், உணர்ச்சிகள் சார்ந்து நிகழும் முரண்பாடுகள். அதனது மனதுக்கும் செயலுக்கும் இடையிலான முரண்பாடுகள். மனவேகத்துக்கும் செயல் வேகத்துக்குமிடையிலான முரண்பாடுகள். இவை எல்லாமே.

இரண்டாவது தளம்: Personal conflicts- தனிப்பட்ட முரண்பாடுகள் (என் மொழிபெயர்ப்பு தவறாயிருக்கலாம்). அதாவது பாத்திரத்துக்கும் அதன் தனி வாழ்வில் சம்பந்தப்பட்ட காதல், நட்பு, குடும்பம் ஆகிய உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடுகள். மாறிச்செல்லும் உறவுகளால் எழும் முரண்பாடுகள் - உதாரணமாக ஆசிரியர் - மாணவர் உறவு நட்பாகலாம், பின்னர் அது காதலாகலாம்... பெற்றார் பிள்ளை உறவுநிலை பிள்ளையின் பருவ மாற்றங்களோடு மாறிச் செல்லலாம்,.. இவ்வாறு பாத்திரங்களின் தனிப்பட்ட வாழ்வின் உறவுகள் எதிர்பார்த்தபடி இல்லாமற் போவதால் ஏற்படும் முரண்பாடுகள்.

மூன்றாவது தளம்: Extra-personal conflicts – வெளி முரண்பாடுகள். (மொழிபெயர்ப்பு தவறுதான், ஆனால் தனிப்பட்ட வட்டத்திற்கு வெளியிலிருந்து எதிர்நோக்கும் முரண்பாடுகள் என்ற கருத்தில் இது அமையும்.) அதாவது சமூக நிறுவனங்கள், புற சக்திகள் ஆகிறவற்றுக்கும் தனிநபர்களுக்கும் இடையிலான முரண்பாடுகள். உதாரணத்திற்கு, அரசாங்கத்துக்கும் குடிமக்களுக்கும், மத நிறுவனத்துக்கும் - பக்தருக்கும், தொழில் நிறுவனத்திற்கும் -வாடிக்கையாளருக்கும், அதிகாரி களுக்கும் - தொழிலாளிக்கும் இடையிலான முரண்பாடுகள் போன்றவை மட்டுமல்ல, இயற்கை அனர்த்தங்களுக்கும், மனிதரால் உருவாக்கப்பட்ட கட்டமைப்புக்கும், நேரம், காலம் மற்றும் அதிலிருக்கும் ஒவ்வொரு அம்சத்துக்கும் ஏற்படும் முரண்பாடுகள். புற உலகத்தவர்கள், அமானுஷ சக்திகள் என்பவற்றுக்கும் மனிதனுக்குமிடையான முரண்பாடுகள், என்ற வகையறாக்கள் யாவும் இதிலடங்கும்.

இம் மூவகை முரண்பாடுகளில், புத்தகக்கதை, நாடகம், திரைப்படம் என்ற, ஒவ்வொரு கதைவடிவமும் ஒவ்வொன்றில் பலத்தைக்

14ம் பக்கம்...




Dr. Arun Rajasekaran
BSc, DDS, MS, CertOrtho, FRCD (Canada)
Certified Specialist in Orthodontics
(Specialist)




Before...



After...

We offer Free Consultations
Practice Limited to Orthodontics
No Refferal Needed from Your Dentist
Evening and Weekend Appointments Available

905.948.8556




We are located in the HSBC building
Free underground parking available

Creating Beautiful Smiles For Tomorrow!

3601 Highway 7 East, Unit 501, Markham, ON, L3R 0M3

# MIDTOWN Honda

3400 Dufferin Street
Toronto, ON M6A 2V1

**Across from Yorkdale Mall**

www.midtownhondausedcars.com

புதிய பாவித்த வாகனங்களை தமிழில் உரையாடி மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

FREE **$500** Dealership Service Credit
WHEN YOU PURCHASE A USED VEHICLE
From Tony Siva

FREE **$500** Gas Card
plus **$150** Dealership Service Credit
WHEN YOU PURCHASE A NEW VEHICLE
From Tony Siva

**$1,000 Holiday CASH**
**when you Finance or Lease**
**2012 CIVIC & CR-V**
from Nov. 01st to Nov. 30th



## FOR NEW CARS Interest Rate Starting at 0.9%

## NO CREDIT BAD CREDIT NO PROBLEM!

Interest Rate as Low as 1.99%
up-to 6.39% ONLY!!!
Please come in.

**2012 Civic** LX AUTO
$0 down @ 1.99%
$138.97/bw
FINANCE FOR 84 MONTHS

**2012 CR-V** LX 2WD
$0 down @ 4.99%
$198.87/bw
FINANCE FOR 84 MONTHS

## 2008 and up used cars

**Civic**
30 in stock
2008 and up @ 3.49% for 72 months
Biweekly payment Starting from
**$72.**

**Accord**
30 in stock
2008 and up @ 3.49% for 72 months
Biweekly payment Starting from
**$113.**

**CR-V**
10 in stock
2008 and up @ 4.99% for 72 months
Biweekly payment Starting from
**$128.**

**Acura RDX**
8 in stock
2008 and up @ 5.99% for 60 months
Biweekly payment Starting from
**$188**

**Odyssey**
10 in stock
2008 and up @ 5.99% for 60 months
Biweekly payment Starting from
**$171.**

**Acura TL**
10 in stock
2008 and up @ 5.99% for 60 months
Biweekly payment Starting from
**$176**

**Acura MDX**
6 in stock
2006 and up Starting from
**$15,999**

**USED CARS Interest Rate Starting at 1.49%**

**$0 down**
November Used Car Clearance Special!!!
DON'T MISS OUT!

HONDA certified used vehicles come with 6 Years or 120,000 km Warranty



Please see me before you buy a used car, don't pay too much!

**Tony Siva**
ரோனி சிவஞானம்
**647-269-0749**
tonymidtown@hotmail.com

**Acura** **Honda** **Toyota**

**120 USED VEHICLES IN STOCK Visit my website www.midtownhondausedcars.com**

# அமெரிக்க தேர்தல் முடிவுகள் இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்துமா?

**"என்னைப் பொறுத்த வரையில் பராக் ஒபாமாக்களும், *மிட் ரோம்னிகளும் இருவரும் அமெரிக்க தேர்தலில் தோற்க வேண்டும். இது சாத்தியமா? அதுவரை மக்கள் தோற்றுக் கொண்டுதான் இருப்பார்கள்."***

**- சிவா ஈஸ்வரமூர்த்தி -**

இருமுதலாளிகளுக்கிடையே நடைபெறும் தேர்தல்தான் அமெரிக்க ஜனாதி தித் தேர்தல். இதில் வெற்றி பெறுபவர் அமெரிக்க முதலாளிகளின் வாழ்வை இன்னும் மேம்படுத்த அமெரிக்க மக்களின் பெயரால் வாக்கு கேட்பார்கள். பல கட்சிகள் உள்ள ஜனநாயக நாடு என்று அமெரிக்காவை கூறினாலும் உண்மையில் இரு கட்சிகளுக்கு இடையேதான் உண்மையான தேர்தல் போட்டி அங்கு நடைபெறுகின்றது. இதிலும் சிறப்பாக இரு கட்சிகள் என்று சொல்வதை விட ஒரு கட்சியில் உள்ள இரு வலதுசாரிகளிடையேயான தேர்தல் போட்டி என்று சொல்வதே சாலச் சிறந்தது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஒருவர் போட்டியிட வேண்டின் அவர் பல கோடி டாலர்களுக்கு சொத்தக் காரராக இருக்க வேண்டும். சாதாரண அடிப்படை சம்பளத்தை பெறும் யாரும் மாநகர கவுன்சில் தேர்தலில் கூட நின்று வெல்ல முடியாத, பணப்பலத்தால் நடைபெறும் தேர்தல்கள் இவை. பின்னே எங்கே இத் தேர்தல்கள் சாதாரண அமெரிக்க மக்களின் பிரச்சனைகளை பிரதி பலிக்க முடியும். தொடர்ந்து தேர்தல் வெற்றிகளின் பின்பு சாதாரண அமெரிக்க பிரஜை களின் பிரச்சினையை தீர்த்து வைக்க முடியும். தேர்தல் வெற்றிகளை தீர் மானிப்பதிலும், ஒரு நாட்டின் மீது போர் தொடுத்தலுக்கான காரண காரியத்தை நிறுவி நிற்பதிலும் அமெரிக்க ஊடகங்கள் ஊடகச் சுதந்திரம் என்ற பெயரால் நடத்தும் நாடகங்களை தற்போது நடைபெற்று முடிந்த அமெரிக்க தேர்தலிலும் நாம் நிறையவே பார்க்க முடியும்.

மீண்டும் உலகில் நலிந்த நாடுகளுடன் வல்லுறவை ஏற்படுத்த துடிக்கும் அமெரிக்கத் தலைவர்களில் நான் முன்னிலை வகிக்கின்றேன் என்பதை பிரச்சாரப்படுத்துவதில் இருவரும் ஒருவருக்கு மற்றவர் சளைத்தவர் அல்ல என்பதை நிறுவியே நின்றனர். இஸ்ரேலுடன் எப்போதும், இஸ்ரேல் ஏது செய்தாலும் நண்பனாக நான் இருப்பேன் என்பதை சத்தியம் செய்த வண்ணம் நடைபெறும் தேர்தர்களில் இதுவும் ஒன்று.

இதனை தொடர்ந்தும் செய்து வருவதினாலேயே பராக் ஒபாமா மீண்டும் அதிபராக வருவதற்கான வாய்ப்புக்களைப் பெற்றிருக்கின்றார். கூடவே சீனாவின் பொருளாதார வளர்ச்சிக்கு மூக்கணாங்கயிறு போடத் துடிக்கும் செயற்பாடுகளில் நான் மட்டும் உலகிற்கு தலைவனாக ஆண்டாண்டுக்கு இருக்க முடியும் என்பதை தேர்ததில் போட்டியிட்ட முன்னணி வேட்பாளர்கள் போட்டி போட்டுக் கொண்டு பிரச்சாரப்படுத்தினர். இதில் சீனாவுடனான தனிப்பட்ட வியாபாரத் தொடர்பால் மிட் ரோம்னி பராக் ஒபாமாவை விட சற்று பிந்தங்கிய நிலையிலேயே உள்ளார்.

மற்றபடி அமெரிக்கா கனிவளம் மிக்க, பலவீனமான நாடுகளின் வளங்களைத் திருட போடும் திட்டங்கள் இருவரிடையேயும் போட்டி போட்டுக் கொண்டே சீறிப் பாய்ந்தன. கடந்த 4 வருட பராக் ஒபாமாவின் ஆட்சிக்காலத்தில் நலிந்த நாடுகளில் மக்கள் கிளர்ச்சிகளை செய்து காட்டி, பராக் ஒபாமா பெருமை பேசியதை மிட் ரோம்னி இனால் பேச முடியவில்லை. ஏன் எனில் அவர் அமெரிக்க அதிபராக இருக்கவில்லை என்பதே காரணம்.
தென் அமெரிக்க, மத்திய அமெரிக்க நாடுகளில் வலுப் பெற்று வரும் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு, அரசுகளை இல்லாமல் செய்ய திட்டம் தீட் டுதல் என்பதை இருவரும் பாரியளவில் பிரச்சாரப்படுத்வில்லை. கடந்த 40 வருடங்களுக்கு மேலாக இந் நாடுகளில் அமெரிக்கா பெற்று வரும் அடியினால் "சீ இந்தப் பழம் புளிக்கும்" என்பதை வெளியில் சொல்லாம் இருவரும் தமது தேர்தல் திருவிழாவில் இதை வடையமாக காவடி எடுத்து ஆடவில்லை என்றுதான் கூறவேண்டும். மற்றயபடி உலகம் முழுவதும் தன் சொல்படி நடக்க வேண்டும் என்ற மேலாதிக் சிந்தனையிலில் குடியரசு என்ன? ஜனநாயகம் என்ன? இரண்டும் ஒரு வண்டியில் பூட்டிய மாடுகள் போலவே செயற்படும் என்பதை அதிபர் தேர்தல் பிரச்சாரங்கள் நிறுவி நிற்கின்றன. அமெரிக்க அதிபர் தேர்தலில் யாருடைய வெற்றியாவது இலங்கை தமிழர் பிரச்சனையில் உருத்திரகுமாரனின் யோசனைக்கு பலம் சேர்க்கும்



என்று 4 வருடங்களுக்கு முன்பு கனவு கண்டதுபோல் யாரும் கனவு காண்பார்கள் என்றால் மீண்டும் நாம் ஒரு நான்கு வருடம் பொரி மாத் தோண்டி கதையை மீட்டு எடுத்துப் பார்க்க வேண்டியே வரும். இதில் இலங்கையுடனான சீனாவின் நட்பு மட்டும் அமெரிக்காவிற்கு சிறிய உறுத்தலை கொடுக்கின்றது என்பது உண்மையே.
இது இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவையும் மீறிய வலுவை சீனாவிற்கு சேர்க்க முடியாது என்பதை அமெரிக்கா நம்பும் வரை இலங்கைப் பிரச்சினை அமெரிக்காவிற்கு ஒரு பொருட்டு அல்ல. இலங்கையின் அரசியல் மாற்றங்கள் ஒரு இரவில் எல்லாவற்றையும் மாற்றிப் போட தனக்கு உதவும் என்பதை அமெரிக்கா தனது கடந்த கால அனுபவங்களில் கண்ட வரலாறு உண்டு. இதற்கு நல்ல உதாரணம் ஜே.ஆர் ஜெயவர்தன ஆட்சிக் காலம்.

இன்றைக்கு 4 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்க வரலாற்றில் திருப்ப முனை யாக அமைந்த அமெரிக்க தேர்தல் முடிவுகள் வெளியான கால கட்டம் அது. ஆமாம் அமெரிக்காவின் சிறுபான்மை தேசிய இனத்தின் தலைவர் ஒருவர் அமெரிக்காவின் அதியுயர் பதவியான ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட கால கட்டம் அது. ஆமெரிக்க மக்களாலும் உலக மக்களாலும் இது பெரிதும் சீர்தூக்கிப் பார்க்கப்பட்ட விடயம் கூட. வெள்ளையின மேலாதிக்கம் உள்ள ஒரு தேசத்தில் இது சாத்தியமா..? என்பதன் அடிப்படையில். ஆனால் அது சாத்தியமாயிற்று.

இதற்கான முக்கிய காரணியாக அமைந்தது புஷ் சீனியர், ஜூனியர் போன்றவர்களின் சண்டித்தனம் மிக்க அரசியல் செயற்பாட்டினால் அமெரிக்க சாதாரண பிரஜைகளின் பாதுகாப்பு உலகெங்கும் கேள்விக்குறியாகி இருந்தது. இந்த சூட்டைத் தணிக்கக் கூடிய செயற்பாட்டை புஷ் கூடாரத்தை விட ஒபாமா கூடாரம் செயற்படுத்தும் என்ற நம்பிக்கையே அமெரிக்க மக்களிடம் வெற்றிக்கான பிரச்சாரத்தை ஊடங்கள் முன்னெடுத்ததற்கான முக்கிய காரணியாக அமைந்தது.

போரின் தோல்விக்கட்டத்திருந்து தமிழீழ விடுதலைப் புலிகளும், அதன் ஆதரவாளர்களும் ஒபாமாவின் வெற்றி தங்கத் தாம்பாளத்தில் தனிநாட்டை வைத்து தமிழ் மக்களின் ஏக தலைமத்துவம் என்று வரிந்து கட்டப்பட்ட தங்களிடம் வழங்கப்படலாம் என்ற பிரச்சார வடிவங்களினால் மேலோங்கி இருந்தது. இதற்கான ஒபாமாவின் னுயேு கல் தோன்றா காலத்து தமிழனின் னுயேு உடன் ஒத்திருக்கின்றது என்ற ஆராச்சியில் ஆளாளுக்கு ஆள் ஈடுபட்டிருந்த கால கட்டம் அது. ஆனால் ஒபாமாவின் கப்பலை எதிர்பார்த்து எமாந்த தலைமை தொடந்தும் போர்க்குற்றத்திற்கு மகிந்த குழாத்திற்கு தூக்குத் தண்டனை வழங்குதல் என்பதில் இன்றுவரை வேறு எவரையும் விட அமெரிக்காவை அதிகம் நம்பி நிற்கின்றது.

ஆனால் அமெரிக்க அரசின் உலக பொலிஸ்காரன் செயற்பாடு ஜனாதிபதிகளின் பெயர்கள் மாற்றத்தினால் மாற்றம் ஏதும் ஏற்படப் போவது இல்லை என்பதை அறிந்திருந்தவர்கள் இலங்கை தமிழர் விடயத்தில் பாரிய மாற்றத்தை, தாக்கத்தை ஏற்படுத்தப் போவது இல்லை என்றே கூறி வந்தனர். இப்படிக் கூறி வந்தவர்களை நம்பிக்கையீனத்துடன் ஏளனமாக பார்த்து வந்தனர் தமிழ் மக்களில் பலர்.

ஒபாமா பதவியேற்ற பின்பு அமெரிக்காவின் தலைவர்கள் செய்து வந்த செயற்பாட்டில் எந்த வகையிலும் குறைவில்லா செயற்பாட்டையே அவரும் அவரது ஆளும் வர்க்கமும் மேற் கொண்டு வந்தனர். ஆமாம் ஈராக், ஆப்கானிஸ்தான் என்ற நாடுகளில் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டி ஜனநாயகத்தை மீட்டல் என்ற செயற்பாட்டை ஏனைய எண்ணை வள நாடுகளுக்கு விஸ்தரிப்பதில் மற்ற வெள்ளையின தலைவர்களுக்கு நான் எந்த வகையிலும் சளைத்தவன் அல்ல என்ற செயற்பாட்டடையே ஒபமாவும் கொண்டிருந்தார். கூடவே இஸ்ரேல் ஏது செய்தாலும் "எங்கடை பெடியள் சரியா கத்தான் செய்வார்கள்" என்றது போன்ற அணுகு முறையையும் கொண்டிருந்தார்.

ஆனால். பயங்கரவாதத்ததை இல்லாது ஒழித்தல் என்று நாடுகள் மீதான் ஆக்கிரமிப்பில் செயன்முறை மாற்றத்தை மட்டும் தன்னகத்தே கொண்டிருந்தார்.
அதாவது ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் தரையினுடான இராணுவத் தாக்குதலால் தாக்குதலால் தினமும் அமெரிக்காவிற்கு வந்து கொண்டிருந்த இராணுவ சடலங்கள் சாதாண அமெரிக்க மக்களுக்கு அமெரிக்க அதிபர் மீது வெறுப்பை ஏற்படுத்தியிருந்தது. இதனைக் கருத்தில் கொண்டு நேரடித் தரைத் தாக் குதலை தவிர்த்து ஆகாயத் தாக்குதலில் மட்டும் தானும் தனது நேட்டோ நேச நாடுகளும் பங்குபற்றுதல், கூடவே உள்நாட்டுக் கிளர்ச்சிக் குழுக்களுக்கு தனது நேட்டோ நண்பர்கள் மூலம் ஆயுத, பண உதவிகளை மேற் கொள்ளுதல், இதன்மூலம் ஒரு வகை உள்நாட்டுக் கலவரங்களை ஏற்படுத்தல், வகை தொகையில்லாமல் பொது மக்களின் மரணங்களை ஏற்படுத்தல், இதற்கான காரணங்களை அந்நாட்டு அரசின் மீது பழியைப் போடுதல், தொடர்ந்து தனது சொல் வழி கேட்காத அரசுத் தலைவரை நீக்குதல், இதன் மூலம் ஆட்சி மாற்றங்களை ஏற்படுத்தி தனக்கு சாதகமான ஒரு அரசை அங்கு நிறுவுதல், போன்ற புதிய அணுகுமுறையை பராக் ஒபாமா கொண்டிருந்தார். இதனால் தனது படை வீரர்கள் கொல்லப்படுவதை கணிசமான அளவு குறைத்தார். இதில் அவருக்கு

16ம் பக்கம்...

# நிம்மதியை குலைக்கும் Autism

Autism என்ற இந்தக் குறைபாடு எவ்வளவு விரைவாக கண்டுபிடிக்கப்படுகிறதோ அவ்வளவுக்கு அதைக் குணப்படுத்தும் வாய்ப்பு அதிகம் என்பதை கடந்த வாரம் விபரித்திருந்தோம். ஒன்றரை வயதுக்குள் குழந்தையின் குறைபாடு கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டால், நான்கு வயதுக்குள் எந்த குறிகளும் இன்றி குணமடைவதற்கான சந்தர்ப்பம் அதிகம்.

ஆனால், குழந்தை பிறந்த ஆறு மாதத்திற்குள் இந்தக் குறைபாட்டுக்கான வெளிக் குறிகள் தென்படுவதில்லை. பல குழந்தைகளில் பிறந்து 14 மாதம் அளவில் இந்தக் குறிகள் தெரிய ஆரம்பிக்கும். ஆனால் சிலருக்கு இரண்டு வயதுக்கு பின்னர் தான் அந்தக் குறிகள் தெரிய ஆரம்பிக்கின்றன. இதனால் இவர்களுக்கான சிசிக்சைகளை சரியான நேரத்தில் மேற்கொள்வதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான குழந்தைகள் தங்கள் வாழ்நாள் முழுவதும் இந்தக் குறைபாட்டின் பாதிப்பினால் கஷ்டப்படுபவர்களாகவே உள்ளனர்.

இதனால் வைத்தியர்கள் குழந்தைகளை ஒரு வயது முதல் கொண்டு இந்தக் குறைபாடுகள் உள்ளனவா என்பதை அவதானிக்க வேண்டும் என்றும் ஐந்து வயது வரைக்கும் சரியான இடைவெளியில் அடிக்கடி குழந்தைகளைப் பரிசோதிக்க வேண்டும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். குழந்தையை வெறுமனே ஒரு குறிப்பிட்ட வயதில் சோதனை செய்வதை விட, குழந்தையைத் தொடர்ந்து அவதானித்து வருவதன் மூலமே இந்தக் குணம் குறிகளைக் கண்டறிய முடியும் என்றும் இந்த ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பேசுதல், கற்றுக் கொள்ளுதல், சாதாரண விடயங்களைச் செய்தல் போன்றவற்றைச் செய்ய காலம் வழமையை விட நீண்ட காலம் எடுக்கும் குழந்தைகளை இந்தக் குறைபாடு உள்ளதா என்பதைப் பரிசோதிப்பது அவர்களுக்கான சிகிச்சைகளை உரிய நேரத்தில் வழங்க உதவும். அமெரிக்காவில் குழந்தைகளை இரண்டு வயதுக்கு முதல் இரண்டு தடவைகள் பரிசோதிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்ட போதிலும் கனடாவில் இவ்வாறான விதிமுறைகள் இல்லை. ஒன்ராறியோவில் 18ம் மாதத்தில் செய்யப்படும் வழமையான சோதனையின் போது மருத்துவர்கள் இந்தக் குறைபாட்டுக்கான அறிகுறிகளை சோதிக்கலாம். ஆனால் இந்த வழமைகள் மாகாணத்திற்கு மாகாணம் மாறுபடும். சில நேரங்களில் பெற்றோர் முறையிட்டாலோ, அல்லது குடும்பத்தில் இவ்வாறான குறைபாடுகள் இருந்தாலோ, அல்லது வெளியே தெரிகின்ற அறிகுறிகள் தெரிந்தாலோ மட்டுமே வைத்தியர்கள் இந்தக் குறைபாடு உள்ளதா எனப் பரிசோதிக்கின்றனர்.

எனவே முடிந்த வரையில் சாதாரண குழந்தைகள் போன்ற செயற்பாடுகளை குழந்தைகள் கற்றுக் கொள்ள காலம் தாழ்த்தினால், உங்கள் குடும்ப வைத்தியரிடம் இந்தக் குறைபாடு குறித்து குழந்தையைப் பரிசோதிக்குமாறு வற்புறுத்துங்கள். சில நேரங்களில் பெற்றோர்கள் உண்மையை ஏற்றுக் கொள்ள மறுக்கும் மனப்பாங்கு உடையவர்களாக இருந்தால், அது குழந்தையின் எதிர்காலத்திற்கு ஆபத்தாக முடியும்.

இந்தக் குறைபாட்டுக்கான காரணம் எது என்று அறியும் முயற்சியில் பல்வேறு ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தனியான ஒரு காரணம் என்றில்லாமல் பல்வேறு காரணிகளாலேயே இந்தக் குறைபாடு ஏற்படுகின்றது என ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

குழந்தை கருத்தரிக்கப்படும் போது தந்தையின் வயது இதில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஐஸ்லாந்தில் இந்தக் குறைபாடுள்ள குழந்தைகளைக் கொண்ட 78 குடும்பங்களின் நிறமூர்த்தங்களை ஆராய்ந்த போது, இதில் தந்தையின் வயது அதிகமாக உள்ளபோது பிறந்த குழந்தைகள் இந்தக் குறைபாடுடன் பிறக்கும் சாத்தியங்கள் அதிகமானதாக இருந்தன. இதுவரை காலமும் தாய்மாரின் வயது அதிகமான வேளையில் கருத்தரித்து பிறக்கும் பிள்ளைகளே இந்தக் குறைபாட்டுக்கு உள்ளாகிறார்கள் என்று நம்பப்பட்டது. இந்த ஆய்வின் பின் தந்தையின் வயது அதிகரிக்க, அவரது விந்தில் உள்ள நிறமூர்த்தங்களில் மாற்றம் (mutation) ஏற்படுகிறது. இந்த அதிகரிப்பினால் பிறக்கும் குழந்தைகளுக்கு அந்த மாற்றம் அடைந்த நிறமூர்த்தங்கள் கடத்தப்பட்டு இந்தக் குறைபாடு ஏற்படும் வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

வயது பிந்திய காலங்களில் கருத்தரிக்கும் பெண்களுக்கு down syndrom போன்ற குறைபாடுள்ள குழந்தைகள் பிறக்க சாத்தியம் இருந்த போதிலும், தந்தைமாரே அதிகளவில் மாற்றமடைந்த நிறமூர்த்தங்களை பிள்ளைகளுக்கு கடத்துபவர்களாக உள்ளனர்.

இந்தக் குறைபாடு பல்வேறு வகைகளுக்குள் அடங்குகிறது என்பதை முன்பும் குறிப்பிட்டிருந்தோம். மற்றவர்களுடன் எந்த விதமான தொடர்புகளும் வைக்க முடியாத அளவுக்கு மனநிலை பாதிக்கப் பட்டவர்களாக இருப்பது முதல் மெதுவான குணங் குறிகளுடன் அதிகளவு திறமை வாய்ந்தவர்களாக இருப்பது வரைக்கும் இந்தக் குறைபாடுள்ள குழந்தைகள் உள்ளனர். அமெரிக்காவில் 88 குழந்தைகளில் ஒருவர் இந்த குறைபாட்டினால் பாதிக்கப்பட்டிருக்கிறார். ஆனால் ஐரோப்பாவில் நூறில் ஒரு குழந்தையே இவ்வாறு பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

விஞ்ஞானிகள் இந்தக் குறைபாட்டுக்கு காரணமாக பல நிறமூர்த்தங்களைக் கண்டறிந்த போதும், அது பத்து வீதமான குழந்தைகளிலேயே பிரதான காரணமாக உள்ளது. மனிதர்களின் பரம்பரை அலகுகளில் 300 கோடி டிஎன்ஏ இருந்தாலும் இதில் நூறுக்கும் குறைந்தவையே மாற்றமடைந்து இந்தக் குறைபாட்டுக்கு காரணமாகின்றன.

(தொடரும்)

ஜோர்ஜ்


நிலாச்சோறு உணவகம்

MooonRice

South Indian & Ceylon Restaurant

Take-Out & Catering



September 30th, 2012

GRAND OPENING SPECIAL!!!

2 MONTHS

MONDAY Buy 1 get 1 FREE Pittu Mix

WEDNESDAY Buy 2 get 1 FREE Koththu Rotti

FRIDAY Buy 1 get 1 FREE Veggie Meals

3050 Confederation Parkway, Unit 109, Mississauga, ON L53 3Z6

905-276-8292

**Rice & Curry**

1. Rice Chicken Curry....6.50
2. Rice Mutton Curry....6.50
3. Rice Fish Curry.... 6.50
4. Rice Crab Curry....6.50

Served with 3 veg curries




**Briyani**

5. Chicken Briyani.... 6.50
6. Mutton Briyani.... 6.50
7. Shrimp Briyani.... 8.00



**Fried Rice**

8. Chicken Fried Rice.... 6.50
9. Shrimp & Egg Fried Rice.... 6.50
10. Seafood Fried Rice....6.50
11. Mixed Fried Rice.... 6.50
12. Chicken Hot Garlic with Rice.... 6.50




**Koththu Rotti**

13. Chicken Koththu Rotti.... 5.50
14. Mutton Koththu Rotti....5.50
15. Egg Koththu Rotti.... 5.50
16. Seafood Koththu Rotti.... 5.50



**Noodles**

17. Chicken Noodle.... 6.50
18. Seafood Mixed Noodle.... 6.50
19. Shrimp Noodle.... 6.50
20. Mixed Noodle....6.50
21. Ceylon Pasta.... 6.50
22. Hot Chicken Wings (1lbs)....8.00

**Pittu**

23. Pittu (3).... 3.00
24. Pittu Mix - Non Veg.... 6.00 (chicken, shrimp & egg)
25. String Hopper (25) (house made).... 3.50 (served with sothi & sambol)



**Side Dishes**

26. Fish Curry.... 6.99
27. Crab Curry.... 7.99
28. Fried Fish.... 4.00
29. Fried Chicken leg.... 2.50

Price subject to chaneg without notice

Business Hours

Mon - Sun 7am - 10pm

# வாழ்வின் துண்டங்கள் சொல்லும் வரலாறு!

09வது இதழின் தொடர்ச்சி-02

**- அழகேந்தி -**

இப்போது நாங்கள் உடையார்கட்டுவிற்கு வந்து விட்டோம். உடையார் கட்டில்தான் முதலில் உக்கிர ஷெல் வீச்சு நடந்தது. ஒரு காலைப்பொழுதிலேயே அங்கே நூறு வரையானவர்கள் செத்து மடிந்தார்கள். அங்கேதான் வே. பாலகுமாரனும் காயப்பட்டார். அந்த நேரத்தில் உடையார் கட்டு மகாவித்தியாலயம் மருத்துவமனையாக்கப்பட்டிருந்தது. விசுவமடுவிற்குப் பிறகு, முள்ளிவாய்க்கால் வரையில் பாடசாலைகளே மருத்துவமனைகளாக இயங்கின. உடையார்கட்டுப் பகுதிக்கு யாரையோ தேடி வந்த பாலகுமாரன் எதிர்பாராத விதமாகக் காயப்பட்டார். அங்கேயே அவருக்குச் சிகிச்சையும் நடந்தது.



என்னுடைய இன்னொரு நண்பரான ஞானியின் மனைவி கொல்லப்பட்டதும் அந்தத் தாக்குதலில்தான். மனப்பாதிப்புக்குள்ளாகியிருந்த மனைவியை அழைத்துக் கொண்டு மருந்தெடுப்பதற்காகச் சென்றபோதே நடந்தது அந்த மரணம். இன்னொரு நண்பரான தவாவின் ஒரேயொரு மகன் பலியானதும் அப்போதே. தவா இத்தாலியில் இருந்து வந்து வன்னியில் குடியேறியிருந்தார். இப்படி இன்னும் பலர் அன்று பலியாகினர்.

எல்லா இடங்களிலும் இருந்து இடம் பெயர்ந்து வந்திருந்த சனங்கள் உடையார்கட்டிலிருந்து வள்ளிபுனம் வரையில் மிக நெரிசலாகக் குடியிருந்தனர். அதனால் தெருவிலும் சனப்புழக்கம் அதிகம். இருந்ததும் ஒரேயொரு தெரு. அந்தத் தெருவைக் குறி வைத்தே படையினர் ஷெல்லை அடித்தார்கள். அழிவும் இழப்பும் உச்சம். தாக்குதல் நடந்த பிறகு அப்படியொரு தெருவை என் வாழ்நாளில் நான் பார்த்ததேயில்லை. அந்த அளவுக்கு அது சதைத் துண்டுகளாலும் இரத்தத்தினாலும் சாவோலத்தினாலும் தீயினாலும் புகையினாலும் கருகும் மணத்திலும் நிறைந்திருந்தது. தெருநீளம் சிதறிய உடல்களும் உடமைகளும் எரிந்து கொண்டிருக்கும் வாகனங்களும் சிதைந்து முறிந்த மரங்களுமாக.

இப்பொழுது உடையார்கட்டில் அந்தப் பாடசாலை மீளவும் இயங்கத் தொடங்கியிருக்கிறது. அவுஸ்ரேலிய நாட்டின் நிதியுதவியோடு, யுனிசெவ் புதிய கட்டிடங்களை அங்கே கட்டிக்கொண்டிருக்கிறது. சனங்கள் மீண்டும் தங்கள் காணிகளுக்கும் வீடுகளுக்கும் வந்துவிட்டார்கள். அவர்கள் மீண்டும் தங்கள் வீடுகளையும் வாழ்க்கையையும் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். சரியாகச் சொன்னால் அவற்றையெல்லாம் கட்டியெழுப்புவதற்காகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், மரணத்தின் வாடையை என்னால் மறக்க முடியவில்லை. அவர்களுக்கும் அப்படி இருக்கலாம். அங்கே நடந்த தாக்குதலைப் பற்றிப் பேசிக் கொண்டே பயணித்தோம்.

சுதந்திரபுரம் சந்திக்கு வந்தபோது வண்டியை நிறுத்தும்படி சாமின் பிள்ளைகள் சத்தமிட்டார்கள். என்ன ஏது என்று கேட்டால், சுதந்திரபுரம் சந்தியில் குவிக்கப்பட்டிருக்கும் கைவிடப் பட்ட வாகனங்களின் குவியலை அவர்கள் கண்டு விட்டார்கள். அதை என்ன என்று அறிய வேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு. சாதிக்குக்கும் சாமிற்கும் கூட அதைப் பற்றி அறிய ஆர்வந்தான். வண்டியை நிறுத்தி விட்டு கீழே இறங்கி அந்த வளாகத்தை நோக்கிப் போனோம். அருகில் ஒரு இராணுவக் காவலரண். அதற்குள் நான்கைந்து சிப்பாய்கள். அவர்கள் வேடிக்கை பார்க்கிறார்கள் போலும். இப்படிப் பல நூறு வண்டிகளும் ஆட்களும் தினமும் வரும்போது அவர்கள் இதையெல்லாம் பார்த்து, விசாரித்துக் கொண்டிருக்க முடியுமா என்ன? இது அவர்கள் வேடிக்கை பார்க்கும் காலம்?! குறிபார்க்கும் காலமல்லவே!

படங்கள் சிலவற்றை சாம் எடுக்க விரும்பினார். எடுத்தோம். சாதிக் எல்லாவற்றையும் நன்றாகப் பார்த்தார். அவ்வளவும் சனங்களின் உழைப்பு. இப்பொழுது எந்தப் பயனுமற்றவையாகி விட்டன. இவையும் சுளை பிடுங்கப்பட்ட கோதுகளே. ஆனால், பார்வைக்கு குவித்து வைக்கப்பட்டுள்ளன. போதாக்குறைக்கு பாதுகாப்பு ஏற்பாடு வேறு. இப்படி வாகனங்களின் எச்சங்களைக் குவித்து வைத்திருக்கும் இடத்தில்தான் முன்னர் பாதுகாப்பு வலயம் என்று அறிவிக்கப்பட்டபோது, வன்னியின் நிர்வாக மையம் அமைக்கப்பட்டிருந்தது. உணவு, மருத்துவம், அத்தியாவசிய சேவைகள், தொடர்புப் பிரிவு, தொண்டு நிறுவனங்கள் எல்லாமே இங்கேதான் இருந்தன. ஏறக்குறைய அன்று வன்னி முழுவதுக்குமான நிர்வாக மையம் இங்கேதான் இயங்கியது.

சுற்றிவர ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இருந்தன. பாதுகாப்பு வலயத்தில், நிர்வாக மையத்தில், வெள்ளைக்காரர்கள் இருக்கிற இடத்தில் தாக்குதல் நடப்பதற்குச் சான்ஸ் குறைவு. அப்பிடி நடந்தாலும் உடனடியாக அது கட்டுப்பாட்டுக்கு வந்திடும் என்ற ஒரு நம்பிக்கையோடு பெருவாரியான சனங்கள் இந்த இடத்தைச் சுற்றிக் குடியிருந்தன.



அகதிகளாற் சூழப்பட்டிருந்த இந்த மையத்தில்தான் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதியும் செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதியும்கூட இருந்தனர். ஆனால், எவரைப் பற்றியும் எதைப் பற்றியும் பொருட்படுத்தாமல் தாக்குதல் நடந்தது. இங்கே விழுந்த அடியோடுதான் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதி சொல்லாமற் கொள்ளாமல் வெளியேறி ஓடித்தப்பினார். அதற்குப் பிறகு போர் முடியும் வரையில் ஐ.நா பிரதிநிதிகள் எவரும் வரவே யில்லை. சுதந்திரபுரம் சந்தியிலிருந்து மேலும் முன்னோக்கி, புதுக்குடியிருப்புப் பக்கமாகச் சென்றோம். சுதந்திரபுரத்தின் உள்ளே செல்வதற்கு நேரம் போதவில்லை. வசதிப்பட்டால் திரும்பி வரும்பொழுது தவற விட்ட இடங்களைப் பார்க்கலாம் என்ற எண்ணம். ஆகவே வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு என்று தொடர்ந்தது பயணம். வள்ளிபுனத்தை மறக்கவே முடியாது. அங்கே ஒரு குடிசையை அமைத்துச் சில நாட்களாவது இருக்கலாம் என்று திட்டமிட்டு, இடம் பார்த்து ஒரு தென்னந்தோப்பில் அதை அமைக்கத் தொடங்கினோம். மழை வேறு அந்த நாட்களில் பெய்து கொண்டிருந்தது. குடிசையை அமைக்கும் வரையில் இன்னொரு குடும்பத்தின் பங்கரில் பங்கு கேட்டுத் தங்கியிருந்தோம். சொல்ல முடியாத அளவுக்கு இரவு பகலாகச் ஷெல் வீச்சு நடந்து கொண்டிருந்தது. இந்த அமளிக்குள் நான்கு நாள் முயற்சித்தும் ஒரு குடிசையைச் சரியாக அமைக்க முடியவில்லை. எப்பவும் தாக்குதல். தொடர்ந்து வரும் சாவுச் செய்திகள். அதில் தெரிந்தவர்கள், அறிந்தவர்கள் என்று பலர்.

நாங்கள் குடிசையை அமைக்கும்போது ஏற்கனவே இருந்த குடும்பங்கள் அந்த இடத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர். இப்படித்தான் அங்கே நிலைமை இருந்தது. நாங்கள் பங்கரை வெட்டத் தொடங்கும்போது இன்னொரு தரப்பு பங்கரை மூடிக் கொட்டிலைப் பிடுங்கிக் கொண்டு வெளியேறும். ஏனென்றால் அதற்குச் சற்று முன்தான் அந்த இடத்தில் யாராவது நாலு பேரை ச்ஷெல் தின்றிருக்கும். அந்தப் பயத்தில் அவர்கள் அவதிப்பட்டுக்கொண்டு வெளியேறுவார்கள். இதைத் தெரியாமல் இடந்தேடிக்கொண்டு புதியவர்கள் அங்கே வருவார்கள். இப்படி ஆட்கள் வருவதும் போவதுமாக இருப்பதை நினைத்தால் சிரிப்புத்தான் வரும். ஆனால், சிரிக்கக்கூடிய நிலைமை அங்கே இல்லை. சனங்கள் வெளியேறிச் செல்லச்செல்ல ஒரு வகையான பீதியே மேலும் கிளப்பும். வள்ளிபுனத்தில்தான் என்னுடைய இன்னொரு நண்பரான இத்தாவில் சிவராஜாவின் அக்காவும் அம்மாவும் ஷெல்லில் சிக்கினார்கள். அக்கா அந்த இடத்திலேயே பலி. அம்மாவுக்கு வலது கால் துண்டு. எழுபது வயதைக் கடந்த பிறகு அப்படியொரு சோதனை அந்த அம்மாவுக்கு.

எங்களுடைய வண்டி வள்ளிபுனத்தை ஊடறுத்துப் போய்க்கொண்டிருந்தது. வள்ளிபுனத்தில் இப்போழுது பாழடைந்த பிளாஸ்ரிக் பொருட்களின் குவியலும் கவிடப் பட்ட வாகனங்களின் குவியலுந்தான் மிஞ்சியிருக்கின்றன. சிதைந்து போயிருக்கும் பாடசாலையைச் சீர்ப்படுத்தும் வேலைகள் ஒருபக்கத்தில் நடந்து கொண்டிருக்கிறது. இன்னொரு பக்கத்தில் வகுப்புகள் நடக்கின்றன. ஆனால், மாணவர்கள் குறைவு. முன்னர் இந்தப் பாடசாலையில்தான் முல்லைக்கோணேஸ், பிரதீபகுமரன் போன்ற எழுத்தாளர்கள் படிப்பித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களைத் தேடி பலதடவை அங்கே போயிருக்கிறேன். அந்த நாட்களில் 500 பிள்ளைகள் வரையில் படித்தார்கள். இப்ப 200 பிள்ளைகளுக்குள்தான் இருக்கும். மற்றப் பிள்ளைகள் இன்னும் பள்ளிக்கு வரவில்லை. இதில் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்திருந்தவர்கள் எல்லாம் தங்களுடைய சொந்த இடங்களுக்குப் போய்விட்டார்கள். அவர்களில்லாத காணிகளும் வெறிச்சோடிப் போயே உள்ளன.

வள்ளிபுனத்தில்தான் விடுதலைப்புலிகளின் தலைமைச்செயலகத்தினுடைய மக்கள் தொடர்புப் பணிமனை ஒருகாலம் இயங்கியது. அந்தப் பணிமனையில் தங்களுடைய பிரச்சினைகளைச் சுமந்து கொண்டு சனங்கள் காலையிலேயே வந்து காத்திருப்பர். மன்னார், மடு தொடக்கம் வன்னியின் நாலு திசையிருந்தும் வரும் சனங்கள் ஒரு நாளைக்கு ஐந்து ஆறு தடவையாவது விமானங்களைக் கண்டு ஓடுவதும் வருவதுமாக அமளிப்படுவார்கள். அது குண்டு வீச்சு விமானங்கள் தலைதெறித்துத் திரிந்த காலம். வள்ளிபுனத்தில் ஆதரவு தேவைப்படும்

14ம் பக்கம்...

*என் எண்ணத்தில் இருந்து...*

# ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிப்போம்

**நமு பொன்னம்பலம்**

பூபாளத்தில் முன்னர் வெளியான கட்டுரையைத் தொடர்ந்து பல்வேறு அன்பர்கள் கிளிநொச்சியில் இயங்கி வரும் மகாதேவா குழந்தைகள் ஆச்சிரமத்திற்கு தங்களால் ஆன உதவிகளை செய்ய முன் வந்துள்ளனர். இவர்களில் பலர் பெயர் குறிப்பிட விரும்பாத நண்பர்கள். இருப்பினும் ஒரு சில மனித நேயங்களை இங்கே குறிப்பிட விரும்புகின்றோம்.

எமது கட்டுரையைத் தொடர்ந்து பெயர் குறிப்பிட விரும்பாத ஓர் அன்பர் தனக்கு மிக வேண்டியவர்களிடம் இருந்து பணம் பெற்று ஓர் குறிப்பிட்ட தொகையினை குழந்தைகள் ஆதரவு கருதித் திரட்டி அனுப்பி வைத்ததோடு மட்டுமல்லாமல், அனுப்பி வைத்த தொகைக்குரிய பற்றுச் சீட்டையும் பணம் செலுத்தியவர்களுக்கு நேரடியாக அந்த நிறுவனமே அனுப்பி வைக்கவும் உதவியிருக்கின்றார். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியில் வாழ்வையும் அமைத்த இந்த அன்பர் தனது சிநேகிதர்கள் மூலம் இந்த உதவியினை தொடர்கின்றார்.

இதே போல இன்னொரு அன்பர் தனது நண்பர்கள் மூலம் பெற்ற பணத்தை அந்த குழந்தைகள் காப்பகத்திற்கு நேரடியாக அனுப்பியும் உதவியுள்ளார். இவரது முயற்சியில் பல முதியோர்கள் தங்களது பிறந்த நாளையொட்டி பணத்தை அனுப்பி வைத்தது மட்டுமல்லாது உதவியினை தொடர இருப்பதனை உறுதி கூறியுள்ளனர்.

இதே போல வேறு அன்பர் ஒருவர் இவ்விடயத்தில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். இவரது முயற்சியின் பலனாக பல்வேறு திட்டங்கள் இச்சிறுவர் சிறுமிகளுக்கு கிடைத்துள்ளன. குறிப்பாக இவர்களுக்குரிய அப்பியாசப் புத்தகங்கள், வாழை மரங்கள் அன்பளிப்பு, சூரிய சக்தியால் இயங்கும் கருவிகள் பொருத்துதல் போன்றன நடைபெற்று வருகின்றன.

இதே வேளையில் இந்த குழந்தைகள் பராமரிப்பு மையம் நேரடியாக பணத்தை சேகரிக்க உதவுவதற்காக சொந்தமாக வங்கிக் கணக்கொன்றை ஏற்படுத்தி தந்துள்ளது. சுமார் 300 பிள்ளைகளுக்கு மேல் தன்னக்கதே கொண்ட இந்த மையம் மேலும் ஆதரவற்ற சிறார்களுக்கு ஆதரவுக்கரம் நீட்ட விரும்பினாலும் கூட பொருளாதாரம் இடம் கொடுக்க மறுக்கின்றது.

சிறிய தொகையாயினும் மக்கள் மனமுவந்து அளிக்க முன்வந்தால் இந்த சிறார்களுக்கு மறு வாழ்வாய் இது அமையும் என்பதால் இதனை மீண்டும் கோரிக்கையாக்குகின்றோம்.

உதாரணமாக பிரித்தானியாவில் உள்ள தமிழர்கள் சிலரின் முயற்சியால் மாடுகள் சில வாங்கப்பட்டன. இவை இந்தச் சிறார்களுக்கு ஒன்று விட்ட ஒரு நாளைக்கே பால் தர உதவுகின்றது. யாராவது அன்பர்கள் நிதி உதவி அளிக்க முன்வந்தால் பசு மாடுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த உதவும் என்கின்றார் இதற்கு உதவி வருகின்ற அன்பர் ஒருவர்.

கடந்த காலங்களில் நடை பெற்ற பண வசூல்களும் முறை கேடுகளும் காரணமாக நேரடியாகவே பணத்தை அனுப்பி வைக்கவே நாம் அனைவரையும் வேண்டுகின்றோம். தொடர்ந்தும் இவ்வாறான முறைகேடுகள் எமது சமூகத்தில் குழந்தைகள் விடையத்தில் தொடர்வது மிகவும் வருந்தத்தக்கதும் கண்டிக்கத்தக்கதும் ஆகும். மக்கள் பெயரில் காசு புடுங்கிய காலம் போய் எம்மில் சிலர் குழந்தைகள் பெயரில் பணம் வசூலித்து தமது பைகளை நிரப்புவது பற்றி ஓர் அன்பர் மிகவும் கவலையோடு தெரிவித்தார். இதனைத் தவிர்க்கவே நாம் நேரடியாக பணத்தை காப்பகத்திற்கு அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

மேலாக இதன் சேவைகளை விரிவு படுத்தவும் மாணவர் விடுதிகளைச் சீரமைக்கவும் நிதி தடையாய் உள்ளது. இந்த நிலைமையில் நமது பொது மக்கள் முன் வரும் பட்சத்தில் இவ் இல்லம் சிறக்க வழி கிடைக்கும்.

இந்த இல்லம் பற்றி அறிய யாராவது முன்வரும் பட்சத்தில் என்னாலான உதவிகளை செய்ய ஆவலோடு உள்ளேன். மேலதிக விபரங்களை அறிய விரும்புவோர் கீழ்வரும் முறையில் தொடர்புகளை ஏற்படுத்தலாம். இவ் இல்லத்திற்கு பணம் அனுப்ப விரும்புவோர் நேரடியாக அனுப்பி வைக்கலாம்.

Current Account No: 9991351 under the name “ Mahadeva Ashrama Saivach Chiruvar Illam’ at the Kilinochchi Branch of the Bank of Ceylon. Our Bank Swift Code Is –BCEY 8ALX.

President: Mr. Rasanayagam
077-0604950

Chief Executive Officer Mr. Ratnasingam 077-2463027 E-mail: - rasa46@yahoo.com Web site :www.mahadevahome.org

உயிர் துறந்தவர் பெயரில், குழந்தைகள் துயர் துடைப்போம்! துயரத்தில் இருந்து நாம் எழுவோம்! ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிப்போம்! ■

## மாயா உலகத்து..

கொண்டிருக்கின்றன. புத்தகக்கதை, குறிப்பாக நாவல்கள் உள் முரண்பாடுகளை (Inner conflicts) எடுத்தாழ்வதற்கு மிகச் சிறந்த கதைவடிவம். மனதில் எழும்பும் ஆயிரக்கணக்கான கேள்விகள், எண்ணங்கள், கற்பனைகள், ஆசைகள், கோபங்கள், தாபங்கள், உணர்ச்சிகள் மனப்போராட்டங்கள் யாவற்றையும் எழுத்துப் படிமங்களாகச் சித்திரிக்கலாம். நாடகம் உள் முரண்பாடுகளை (Personal conflicts) வெளிப்படுத்துவதற்கு சிறந்த கதைவடிவம். அதாவது ஒரு பாத்திரத்துக்கும் அதற்கு நெருக்கமான சக பாத்திரங்களுக்கும் இடையிலான முரண்பாடுகளை ஆளுமை மிக்க உணர்ச்சிகரமான வசனங்கள் மூலம் துலாம்பரமாக எமக்குப் புலப்படுத்தலாம். திரைப்படம் புறச் சமூகத்துக்கும் பாத்திரத்துக்குமான வெளி முரண்பாடுகளை (Extra-Persolal Conflicts) சித்திரிக்க சிறந்த கதைவடிவம்.

தரமான நாவல்களைத் திரைப்படங் களாக்கும்போது (தமிழ்ப் படங்கள் மட்டுமல்ல, ஆங்கிலப் படங்கள்கூட) ஏன் சோடைபோய் விடுகின்றன என்பதை இதிலிருந்து புரிந்துகொள்ளலாம். இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, நாவல்களின் எழுத்தோவியங்களாக தீட்டப்பட்ட அழகுணர்ச்சியை “விவரணத்தை திரைப்படக் காட்சிகளால் ஈடுகொடுக்க இயலாமை” aesthetic impossibility. இரண்டவது, ஆற்றல் குறைந்த ஒரு சாதனத்தால், ஆற்றல் கூடிய சாதனமொன்றின் படைப்பை பிரதியிட முயன்றால் அதன் படைப்பு மற்றையதைவிட தரம் குறைந்ததாகத்தானே அமையும். உள்மனச் சிக்கல்கள் மற்றும் மனச் சித்திரிப்புக்களைப் புலப்படுத்துவதில் நாவல்களுக்கு இணையான கதைவடிவம் எதுவும் இல்லை. அவற்றை திரைப்படம் முழுமையாக வெளிக்கொணரத் தவறும் வாய்ப்பு மிக அதிகம். தவறும் பட்சத்தில், அந் நாவலுடன் ஒப்பிட்டு நோக்கும் பார்வையாளர்களுக்கு எதிர்பார்த்த திருப்தி கிடைப்பதில்லை. அதனால்தான் மிகச் சிறந்த நாவல்களில் பல திரைப்படத் தயாரிப்பாளர்கள் கைவைப்பதில்லை.

நாடகங்களைத் திரைப்படமாக்கு வதிலும் இதுபோன்ற சிக்கல்கள் எழத்தான் செய்யும். நாடகங்களில் வசன சித்திரிப்புகள் பிரமாதமாக அமையும். அவற்றில் வசனங்களிலேயே பாத்திரங்களுக்கிடையிலான முரண்பாட்டின் மையங்கள் பொதிந்து கிடக்கின்றன. அந்த மையங்களை திரைப்படத்தில் கமெராவின் மொழிக்கு மாற்ற வேண்டும். அது மிகச் சிரமமான காரியம். நாடத்தைப் பார்க்கும்போது நாடக வசனங்களால் புளகாங்கிதமடைகின்ற பார்வையாளர்கள் அவற்றையே திரைப்படத்தின் பாத்திரங்கள் பேசும்போது, யதார்த்தத்தில் இப்படி மனிதர்கள் பேசுவதில்லையே என்ற வேறுபாட்டை உணர்கிறார்கள். அவ் வசனங்களை இயல்பான வசனங்களாக நாம் திரைப்படத்தில் மாற்றியமைக்கும்போது, அவ் வசனங்களில் பொதிந்திருந்த முரண்பாட்டு மையங்கள் சிதைந்துபோய் விடக்கூடும். 80 வீதம் காதினூடகக் கிரகிக்கும் நாடகக் கதைவடிவத்திலிருந்து 20வீதமே காதினூடாகக் கிரகிக்கின்றதும் 80 வீதம் கண்களுக்குரியதுமான திரைப்பட வடிவத்துக்கு மாற்றப்படும்போது திரைப்படத்தின் வசனக் கொள்ளளவு மிகை நிரம்பி வழிவதுடன் காட்சிகளில் வெறுமை படிந்து சோடைபோய்விடுகின்றன. எமது இடைக்காலத்துக்குச் சற்று முந்திய திரைப்படங்களில் இத் திணறல்கள் துலாம்பரமாத் தெரியும்.

உங்களுக்கு இப்போது ஒரு கேள்வி எழும் - ஏன் ஆங்கிலத்திலும் ஷேக்ஸ்பியர் நாடகங்களையெல்லாம் திரைப்படமாக்கித்தானே உள்ளார்கள் என்று. அவ்வாறான ஆங்கிலப்படங்கள் மட்டுமல்ல, ராஜராஜசோழன் போன்ற தமிழ் சரித்திரப்படங்களும், புராணப் படங்களும் வெற்றிநடை போட்டுத்தான் உள்ளன. இதற்கு இன்னொரு உளவியல் காரணம் உள்ளது. அதாவது இக் கதைகள் சமகாலத்துக்குப் புறம்பானவை. நாம் நேரிடையாகக் காணாத இவற்றைத் தொன்மங்கள் என்பர் (தொன்மையானவை என்ற அர்த்தத்தில்). இத் தொன்மங்களின்மீது எமக்கு மிகை மதிப்பீடுகள் உண்டு. அவை பிரமிப்புகளாக, பக்தியாக, பெருமிதங்களாக, இலக்கியச் சுவைகொண்டவையாக எம் மனதில் ஏற்கெனவே இடம்பிடித்தவை. அம் மிகை உணர்ச்சிகளை வேண்டிநிற்கும் மனநிலைக்கு எம் ரசிகா உணர்வு மாறிவிடும். இவற்றை நாம் சமகால யதார்த்தம் கொண்டு அளவிடுவதில்லை. ஏனெனில் அக்கால யதார்தங்களின் அளவீடுகள் எம்மிடம் இல்லை. எனவேதான் அவை எமக்கு அபத்தமாகத் தெரிவதில்லை. எங்கள் வீரபாண்டிய கட்டபொம்மனில் சிவாஜியின் அடுக்கு வசனங்கள் எம்மைப் புல்லரிக்க வைத்ததன் காரணமும் இதுதான் - குறுகிய வரலாற்றுக் காலம்தான் ஆயினும் நாம் அவற்றைத் தொன்மங்களாக்கிக் கொண்டோம். (இதே வகையான வீரம் செரிந்த போராட்டத்தை, ஓமார் முக்தார் திரைப்படத்தில் வார்த்தை ஜாலங்களேயின்றி, அன்ரனி குயினின் இயல்பான நடிப்பில், எத்துணை வீச்சோடு சொல்லியிருந்தார்கள் என்பதையும் நாம் மனங்கொள்வது நல்லது.)

சரி, அப்படியானால் நாவல்கள், நாடகங்களைத் தழுவி திரைப்படம் தயாரிப்பது எப்படி? இந்தக் கேள்வியை அப்படியே வைத்துக்கொள்ளுங்கள். அடுத்த தடவை ஐடியா தருகிறேன். **வளரும்.**

## வாழ்வின் துண்டங்கள்...

பிள்ளைகளைப் பராமரிக்கும் ஒரு மையமும் இருந்தது. இன்னும் அந்தக் கட்டிடங்கள் அங்கேயுள்ளன. படையினரின் கட்டுப்பாட்டில் இப்போதவை இருக்கின்றன போலும். வள்ளிபுனம் குளத்தில் ஆட்கள் யாரும் இல்லை. முந்திக் காலை மாலை என்றில்லாமல் ஆட்கள் குளத்தில் குளித்துக் கொண்டேயிருப்பர். பெடியளின் கும்மாளமும் இருக்கும். கலகலப்பு எதுவும் இல்லாமல் சோம்பியிருக்கும் செம்மண் தெருவழியே போய்க் கொண்டிருக்கிறோம். ஷெல்லடியில் தப்பி, வழிநீளம் நின்ற மரங்களை மின்சார விநியோகத்துக்காக வெட்டித் தள்ளியிருக்கிறார்கள். காணிகளுக்குள்ளும் தென்னைகளில் பாதியில்லை. ஒருகாலம் வள்ளி புனம், தேவிபுரம் பகுதிகள் தென்னந் தோட்டங்களும் தேங்காய்களுமாக இருந்தன. வள்ளிபுனம் கழியத் தேவிபுரம். தேவிபுரத்தில் சற்றுக் களைகட்டியிருக்கிறது. பத்து இருபது கடைகள் வந்து விட்டன. சன நடமாட்டமும் சற்றுக் கூடியுள்ளது.

ஆனால், போரின் தழும்புகள் நீங்கவில்லை. தேவிபுரத்தின் உள்ளே உள்ள ஆச்சி தோட்டம் ஒரு காலம் மிகப் பெரிய தென்னந்தோட்டமாக இருந்தது. வாரத்துக்கு மூன்று நான்கு தடவைகள் லொறிகளில் தேங்காயை ஏற்றுவார்கள். யுத்தத்தின்போது இந்தத் தோட்டத்தில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கியிருந்தன. தென்னந்தோப்பு ஒரு குடிசைகளும் கூடாரங்களும் நிரம்பிய சிறிய நகரம்போலாகியது. ஒரு நாள் அந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களையும் நோக்கி யுத்தப் பிசாசு ஷெல் வடிவில் வந்தபோது அந்தத் தோப்பு இரத்தக் களரியாகியது. அப்போதங்கே சனங்களுக்கும் தலையில்லை. தென்னைகளுக்கும் தலையில்லை. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, இப்பொழுது மீண்டும் சனங்கள் எல்லாவற்றையும் சரிப்படுத்த முயன்று கொண்டிருக்கிறார்கள். என்றாலும் தேவிபுரத்தில் தேங்காய் விலை முன்னெப்போதையும் விட ஏறிவிட்டது. தென்னந்தோப்புகளை வைத்திருந்தவர்களோ தேங்காய்களை விலைக்கு வாங்குகிறார்கள்.

நாங்கள் புதுக்குடியிருப்பில் நுழைந்த போது அங்கே கண்ணிவெடிகளை அகற்றிக் கொண்டிருந்தார்கள், ஹலோ ட்ரஸ் நிறுவனத்தினர். சனங்கள் வாழ்ந்து புழங்கிய இடங்களில் பற்றைகள் வளர்ந்து விட்டன. அந்தப் பற்றைகளின் கீழே விதைக்கப்பட்டிருக்கின்றன கண்ணி வெடிகள். அந்தக் கண்ணிவெடிகளை அகற்றிக் கொண்டி ருக்கிறார்கள் மிதிவெடிகளை அகற்றும் பணியாளர்கள். சாதிக் ஆச்சரியமாக அவர்களைப் பார்த்தார். மரணப்பொறிகளுடன் விளையாடும் விளையாட்டைப் பார்க்கும்போது யாருக்குத்தான் ஆச்சரியம் வராது, யுத்தம் முடிந்து விட்டது. யுத்தத்தின் அரசியலும் வேறு திசைகளை நோக்கிப்பெயர்ந்து விட்டது. ஆனால், யுத்த வலயப் பகுதியின் நிலைமைகள் இன்னும் மாறவில்லை என்றார் சாதிக். அவர் நிலைமையை நன்றாகப்புரிந்து கொண்டார்.

இந்தக் கண்ணி வெடிகளை அகற்றினால் தான் சனங்களை மீளக் குடியேற்ற முடியும். இல்லையென்றால் மீள் குடியேற்றமே சாத்தியமில்லை. உண்மையில் மீள் குடியேற்றத்தைச் சாத்தியப் படுத்துபவர்களே இவர்கள் தான் என்றேன். கொழுத்தும் வெயிலிலும் சளைத்து விடாமல் நிலத்தைத் துப்புரவு செய்து கொண்டிருந்தனர் அந்தப் பணியாளர்கள். யுத்தத்தின் நீட்சி சிறியதல்ல. அது சாதாரணமானதும் அல்ல. வரலாற்றில் முதற்தடவையாக இந்த மாதிரி யுத்தத்தை நடத்தி, அதன் சுவையை அறிந்து கொண்டிருப்பவர்கள் நாங்கள். (தொடரும்) ■

# மதிலுகள்

பேரறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

நீண்ட நாளுக்கு முன்னால் ஒரு மலையாளப்படம். மம்முட்டி நடித்தது. ஒரு மதிலால் மட்டுமே பிரிக்கப்பட்ட ஆண், பெண் சிறைச் சாலைகளுக்குள் இருக்கும் கைதிகளிடையே மதிலைக் கடந்து முகம் தெரியாமல் எழும் காதல் பற்றியது.

மதில்களுக்கு மேலால் காதல் வருவது மலையாள நாட்டில் மட்டும் தானா? நம் நாட்டிலும் தான். வேலி அடைத்து சிறை வைத்தாலும் வேலி தாண்டிய வெள்ளாடுகளும் வேலி பாய்ந்த வேங்கையர்களும் நிறைந்த ஈழ வளநாடு அது.

வேலி என்றாலும் கிடுகுக்குள்ளால் துளை போட்டு முகம் பார்த்து காதல் பண்ணலாம். மதிலுக்கு அப்பால் யார் நிற்பார் என்றே தெரியாத நிலையில் காதல் என்பது பெரிய ரிஸ்க். விசயம் தெரியாமல் கடிதத்தை வீசப் போக, மதிலுக்கு அப்பால் மாமனார் நின்றால்... கொலையே விழும்.

அட மடப்பய மவனே... பக்கத்து வீட்டுக் காதல் என்றெல்லாம் எதுக்குடா இந்த விபரீதம் எல்லாம்?

கியூறியஸ் மாதிரி ஊர் விட்டு ஊர் போய் காதல் பண்ணினால்... மச்சினன்மார் வலை வீசும் போது தலை மறைவாவது சுலபம். இப்படி வேலிக்கப்பாலான காதலானால், படலையைக் கடந்ததுமே அடி விழும். அதையும் விட, மம்மல்களுக்குள் வேலிகளுக்குப் பின்னால் மறையப் போனால்... வயிற்றில் பிள்ளையோடு 'ஷொட்கன் வெடிங்' தான். மவனே... தலை மறையவே முடியாது.

ஊரில் தங்கச்சிமாரை வைத்திருக்கும் ஒவ்வொரு அண்ணன்மாருக்கும் ஏதோ கண்டறியாத திரவியத்தை வைத்திருக்கும் நினைப்பு. ஏதோ கண்ணை ஒப்படைத்து கண்ணீரைப் பார்க்கக் கூடாது என்பது மாதிரி, எங்கோ இருந்து ஒரு ஆனந்தனைக் கூட்டி வந்து கட்டி வைப்பார்கள். ஊரில் இவர்கள் அடித்த இந்த பந்தாவினால் இந்த திரவியங்களை எல்லாம் கணக்கெடுக்காமலே விட்டு, ஊரு விட்டு ஊரு வந்து காதல் பண்ணினால்... மச்சினன்மார் அதை விடப் பந்தா! ஏதோ பாத்திராத கிளி மாதிரி ஒரு கிளியோபாத்திரா நினைப்பு. இந்த மூஞ்சிக்கு இப்படி ஒரு பந்தாவா... போங்கடா, எவனாவது ஒரு ஆனந்தனுக்கு கட்டி வையுங்கடா என்று கியூறியஸ் தலைமறைவானான்.




இந்த மதில்கள் எல்லாம் வேலியிலிருந்து கூர்ப்படைந்தவை. ஊரில் நிறைந்த கிழுவை, கிடுகு கொம்பினேஷன் வேலிகள் மழை, வெயிலுக்கு உக்கி, கறையான் அரித்து நொய்ந்து போய் இருக்க... பணம் படைத்தவர்கள் தங்கள் திரவியங்களைப் பூட்டி வைக்க மதிலே கட்டினார்கள். ஏதோ சீனப் பெருஞ்சுவரைக் கட்டி மொங்கோலியர்களைத் தடுத்தது மாதிரி, கியூறியஸ் மாதிரிக் கட்டழகர்கள்...

டேய் நிறுத்துடா...

ஏதோ தங்கள் திரவியங்களை திருடி விடுவார்களோ என்ற எண்ணத்தில் பலப்படுத்தப்பட்ட வேலிகள் தான் இந்த மதில்கள்.

வேலிக்கு நட்ட மரங்களான கிழுவையும் பூவரசும் முள்முருங்கையும் வீட்டில் வளரும் ஆடு, மாட்டுக்கு உணவாக இருந்தன. கதிய(க)ால்கள் விற்று பணம் சம்பாதிக்கக் கூடியனவாயும் இருந்தன. வேலியை விட, கொப்புகள் அதிகமாய் வளர்ந்து இன்னமும் குமர்களை மறைத்தன. வேலி வெறும் பாதுகாப்பாக மட்டுமன்றி, வருவாய்க்கான வழியாகவும் இருந்தது. இந்தப் பயன்களையும் கடந்து, ஏதோ ஒரு நினைப்பில் மதில்கள் வளர்ந்தன.

வேலி பாய்ந்த தமிழன் மதில் பாய மாட்டான் என்ற எண்ணமோ?

பெரும் பொருட் செலவில் எழுந்த இந்த மதில்கள் எல்லாம் ஒரு வகை ஸ்டேட்டஸ் சிம்பல்கள்.

ஒரு காலத்தில் கோயில்களும் பாடசாலைகளும் அரச கட்டடங்களும் மட்டுமே மதில்களுடன் இருந்தன. இதில் கோயில் மதில்களுக்கு ஏன் கருஞ்சிவப்பு, வெள்ளை வரி வரியாக அடிக்கப்படுகிறது என்பது இன்று வரைக்கும் கியூறியஸ்க்கு தெரியாது. அந்த ஆகம விதிகளை யாராவது ஆசாரியர்களை விளக்குமாறு கேட்கிறோம். அதிலும் அந்த மதில்கள் ஏன் அவ்வளவு உயரமாய் கட்டப்பட்டன என்றும் தெரியவில்லை. வைரவர் வேலி பாய்ந்து விடுவார் என்ற பயமோ என்னவோ?

இந்த பொதுக் கட்டடங்களைத் தவிர, பணக்காரர்கள் வீடுகளுக்குத் தான் மதில்கள் இருந்தன. ஊருக்கு ஊர் பாழடைந்த பேய் வீட்டுக் கணக்கில் இருக்கும் இந்த சுண்ணாம்பு வீடுகளுக்கு எல்லாம் பாசி பிடித்துக் கறுத்த சுண்ணாம்பு மதில்கள் இருக்கும். இந்த மதில்களின் பின்னால் நிற்கும் மாமரங்களில் ஏறி மாங்காய் திருடவும், திருடிய மாங்காயைக் குத்திப் பிளக்கவும் இந்த மதில்கள் உதவும். இவை நீண்ட நாட்களின் பின் உதிர்ந்து உள்ளே இருந்த கற்கள் தெரிய பல்லிளிக்கும்.

பின்னால் யாழ்ப்பாணிகளின் கொழுத்த சீதனக் காசுகளின் பயனாய், சீமெந்துக் கட்டிகளில் கட்டிய மதில்கள் எழுந்தன. நகரில் வீட்டைச் சுற்றியும், கிராமங்களில் முன்புறமும் மட்டும் என எழும் மதில்களுக்கு நடுவே இரும்புப் படலை இருக்கும். அந்த இரும்புப் படலை உருள, தரையில் சீமெந்து போட்டு, வளைவான இருப்புப் பாதையும் இருக்கும். இந்த இரும்புப் படலைகளும் மேல் பாதிக்கு மட்டும் தகர மறைப்புப் போட்டு, குமர் மறைப்புப் பணி தொடர்ந்தது. முகத்தைப் பார்க்க முடியாது. கூட்டுகின்ற விளக்குமாறையும் காலையும் பார்க்கலாம்.

வேலி மறைந்து மதில் வந்தாலும் அதில் லாபம் உண்டு. மழை காலங்களில் இரவுகளில் மதில்கள் மேலால் வளர்ந்திருக்கும் ரோஜாக்கள், குறோட்டன்களை சைக்கிளில் சாய்ந்து நின்றபடியே முறித்து வீட்டே கொண்டு வந்து அக்காமாரின் பாராட்டுதலை வாங்க முடிந்தது. இதெல்லாம் இளவட்டங்கள் தாங்களாகவே திட்டமிட்டுச் செய்வனவும் அன்று. அக்காமார் 'றெக்கி' பார்த்து வந்து சொல்லியனுப்பிய பின்னால் நடக்கும் திருவிளையாடல்.

மாடி வீட்டு ரோஜாத் தடியைக் கொண்டு வந்ததால் பாராட்டு. மாடி வீட்டு ரோஜாவைக் கிளப்பி வந்தால் தானே பிரச்சனை.

வேலியோரத்துப் பூவும் ஜன்னலோரத்துப் பெண்ணும் அதிக காலம் அந்த இடத்தில் இருப்பதில்லை. கியூறியஸ் இவ்வாறாக வேலியோரத்து ரோஜாத் தடிகளோடு மினக்கெட, அவன் அவன் ஜன்னலோரத்து ரோஜாக்களைக் கொண்டு போய் சேர்த்தான்.

இந்த மதில்களுக்கு பெயின்ட் வேறு அடிபடும். ஒரு காலத்தில் பழைய அப்பிள் கம்பியூட்டர் நிறத்தின் பல்வேறு செறிவுகளில் வரி வரியாக பெயின்ட் அடிப்பது யாழ்ப்பாணத்தில் பெரிய பாஷன். மந்தைக் கூட்டம். யாராவது ஒருத்தன் செய்தால் அப்படியே அதைப் பின்பற்றும். கொஞ்ச நாள் வீடு, மதில் என்று பார்க்கவே சகிக்க முடியவில்லை.

இந்த மதில்கள் எல்லாம் வெறுமனே யாழ்ப்பாணிகளின் குமர்காப்புப் பணிகளில் மட்டும் ஈடுபடவில்லை.

இந்த மதில் தான் உள்ளூர் புத்திஜீவிகளின் கருத்துச் சுதந்திரத்திற்கு களம் அமைத்துக் கொடுத்த இணையம்.

கரி, தார் அல்லது பூவரசம் இலை மூலம் கருத்துச் சுதந்திரம் வெளிப்படும்.

அன்னலட்சுமிக்கும் அப்புத்துரைக்கும் காதல் போன்ற திடுக்கிடும் தகவல்களும்... (இது பெரும்பாலும் அன்னலட்சுமி மேல் ஒரு தலைக்காதல் கொண்ட அப்புத்துரை, வேற்றூர் ஆனந்தனுக்கு கண்ணை ஒப்படைக்காமல் விடச் செய்யும் திருவிளையாடல்...)

அவ்வூர்ப் பெரிசுகளின் தர்ம பத்தினிகளின் கற்பைக் கேள்விக் குள்ளாக்கும் அறிக்கைகளும்...

உயிர் தமிழுக்கு.. உடல் மண்ணுக்கு என்ற காலாகாலமும் மாறாத கோஷங்களும்...

போடு புள்ளடி செம்மறிக்கு நேரே என்ற பட்டினசபை அபேட்சகர்களின் வாக்கு வேட்டைகளும்...

எம்.ஜி.ஆர் வாழ்க என்ற விசுவாச அறிக்கையும், அதற்கு சிவாஜி ரசிகர்கள் அடித்த சாணியும்...

பின்னாளில் அஞ்சா நெஞ்சினராய் வெஞ்சினங் கொண்ட வேங்கையென வெகுண்டெழுந்து பகையடக்கப் புறப்பட்டு நெஞ்சிலும் நெற்றியிலும் பிடரியிலும் விழுப்புண் தங்கி வீரசுவர்க்கத்திற்கு விசா எடுத்து இமிகிரண்டாகவும் 'தலை மாற்றி' அகதியாயும் போய்ச் சேர்ந்த தானைத் தளபதிகளின் தீர உருவப்படங்களுடன் கூடிய, சாயம் போன அஞ்சலிகளும்...

அவர்கள் 'தேடப்படுகிறார்கள்' என்ற பாடசாலை அடையாள அட்டைப் படம் தாங்கிய நோட்டீஸ்களும்...

'நோட்டிஸ் ஒட்டப்படாது' என வீட்டுக்காரார் எழுதிவைத்த கோரிக்கை, பயமுறுத்தலை மறைத்து நிற்கும்.

இந்த புத்திஜீவிகளை மிஞ்சிய புத்தி ஜீவிகள் மதில்களை துளைகள் நிறைந்த கற்கள் வைத்துக் கட்டியும் மதில் மேல் சீமெந்துப் பூச்சில் குறுணிக்கற்களை ஒட்டியும் மதில்களைக் காத்துக் கொள்வர்.

இந்த மதில் மேல் காவியம் படைத்த புத்திஜீவிகள் என்ன ஆனார்கள் என்று நீங்கள் கவலை கொள்ளத் தேவையில்லை. பாதிப் பேர் கனடாவில் பத்திரிகையும் மீதிப் பேர் இணையத்தில் பின்னூட்டமும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மதில்களுக்கு எல்லாம் அப்பனான ஒரு மதில் உண்டு. அந்த மதில் அமைந்திருக்கும் இடமும் அதன் பின்னணியும் தமிழனின் இன்றைய நிலைக்கான காரணத்தைச் சரியாகவே காட்டி நிற்கும்.

பலாலி வீதியில் தபால் பெட்டியடிச் சந்தி என்றுண்டு. திருநெல்வேலிச் சந்திக்கும் பரமேஸ்வராச் சந்திக்கும் இடையில்! முன்பு யாழ்ப்பாணத்திற்கு தொலைத்தொடர்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான திட்டம் கொண்டு வரப்பட்ட போது வீதிகளைக் கிண்டி குழாய்கள் புதைத்து அவற்றூடாக கம்பிகள் அனுப்பும் வேலைகள் நடந்தன. ஊர்ந்து வரும் தபாலில் இருந்து தமிழன் முன்னேறி தொலைபேசி வரைக்கும் போகக் கொண்டு வரப்பட்ட திட்டம் அது. தபால் பெட்டிச் சந்தியில் அவ்வாறாக தோண்டப்பட்ட கிடங்கு இருந்தது. இந்தக் கிடங்கிற்கு அருகில் தான் தேசியத் தலைவர் முதல் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தி 13 இராணுவத்தினரை (செல்லக்கிளியையும்?) கொன்றார்.

இதன் பயனாக கலவரம் வெடித்து பல தமிழர்கள் கொல்லப்பட்டு, பல்லாயிரக் கணக்கானோர் அனைத்தும் இழந்து அகதிகளாகி, சிறைச்சாலையில் தமிழ் கைதிகள் கொல்லப்பட்டு என தமிழனின் சீரழிவு ஆரம்பித்தது. தமிழனின் முன்னேற்றத்துக்கு வழி வகுத்திருக்கக் கூடிய தொலைத்தொடர்புத் திட்டமும் அத்தோடு அம்போ!

இப்படியாக மொத்தத் தமிழினத்தின் அழிவுக்கும் வெடி கொளுத்தி தொடக்க விழா நடத்தியது அந்த இடத்தில் தான். இந்த இடத்தில் பல்கலைக்கழகப் பக்கமாய் திரும்பும் ஒழுங்கையின் மூலையில் ஒரு வீடு உண்டு.

அதே பாசி பிடித்த கறுப்பு நிற மதில்களோடு உள்ள பாழடையாத வீடு. அந்த வீட்டில் முன்புறமாய் உள்ள மதிலிருந்து ஒரு மதில் கிளம்பி நடுக் கதவைப் பிரித்துக் கொண்டு உள்ளே வீட்டைக் கடந்து பின்புறம் வரை செல்லும். சகோதரர்களுக்கு இடையிலான பாகப்பிரிவினை தாய்வீட்டை நடுவில் மதில் போட்டு சகோதர பாசத்தை ஊருலகுக்கு காட்டி நின்றது.

இது தான் எங்கள் ஈழத் தமிழினத்தின் பெருமை மிக்க சின்னம். சொந்தச் சகோதரர்களே ஒற்றுமையாக இருக்க முடியாமல், காணி பூமிக்காக அடிபட்டுக்

16ம் பக்கம்...

# விளம்பரங்கள் (CLASSIFIED)

## Bookkeeping

Affordabel Personal, Corporate Tax, and Bookkeeping Services
**Call Kenga 647.400.3973**

## Catering

Home made food - free estimates for small or large parties
**416 836 7760**

## Driving Instructors

Driver Training MTO approved full course $ 289
**647 700 4941**

-----------------------------------

Driving Lessons Tamil woman instructor
**647 778 4064**

## Handyman Services

Maintenance person available
**Selvam: 647 408 7357**

-----------------------------------

Handyman any work small or large
**Antony 416 938 7711**

-----------------------------------

Home upgrades small or large
Free estimates
**Vivek 416 427 4486**

-----------------------------------

Painter available. Free Estimates.
**647 408 7357**

## Home Day care

Baby sitting available
Markham & Ellesmere
**Uthaya 416 716 2484**

## Rental

Basement for Rent
Kennedy/Eglington
1 Bed room, Living Room, Kitchen, Full wash room, Parking, TV cable and separate Entrance
Close to TTC (Kenady Subway), School, and all Amendment
Quiet place
Available immediately
**Tel: (905) 334 5409**

-----------------------------------

Walkout Basement for Rent
McCowan/Elesmere
1 Bed room and , Living Room, Kitchen, Full wash room, separate Entrance
Close to TTC(McCowan Subway), School, Scarborough Town Center and all Amendment
Quiet place
Available from Dec 1, 2012
**416 265 9138, 416 271 8467**

-----------------------------------

Basement For Rent
இரண்டு படுக்கையறைகள். சமையலறையுடன் கூடிய நிலக்கீழ் வீடு வாடகைக்கு உண்டு. புதிதாகப் புனரமைக்கப்பட்ட இந்த வீடு மூன்று ஆரம்ப பாடசாலைகளுக்கு அருகில் உள்ளது. பஸ் தரிப்பிடத்தில் இருந்து இரண்டு நிமிட தூரத்தில் உண்டு.
91 Jarwick Dr
On Bellamy between Lawrence/Ellesmere
**647-273-7340 (Siva)**

## Tutoring

Looking for a French Teacher?
In Mississauga
All level of French
**Call Theepa: 647-924-5657**

-----------------------------------

Private Tuition Classes
Math: Grade 9, 10, 11 and 12
Physics: Grade 11 and 12
**Siva 416 271 8467**
**416 265 9138**

-----------------------------------

QUALITY HOME TUTOR
Kindergarten – Grade 8
ONE-on-ONE tutoring
Reading , Language Art/English, Math, Science, Social Studies
**call (647) 284 – 8426**

-----------------------------------

**பிரத்தியேக வகுப்புக்கள்**
**கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம்**
பாலர் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரையுள்ள உங்கள் பிள்ளைகளுக்கு கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கு பிரத்தியேக உதவி தேவையாயின் அழையுங்கள்------- **647 869 2243**

-----------------------------------

Private Tuition Classes
(Mississauga)
Math: Grade 9, 10, 11 and 12
Physics: Grade 11 and 12
**647 868 6475**

Free Classifieds – Limited Time Offer / Some Conditions Apply
For More Info Call Boobalam at 416 284 4004

### அமெரிக்க தேர்தல்...

கிடைத்த முதல் வெற்றி லிபியாவின் ஆட்சி மாற்றம் என்றே கூறலாம். துனிசியா, எகிப்து போன்ற நாடுகளின் ஆட்சி மாற்றங்கள் தவிர்க்க முடியாமல் உருவாக்கபட்டவையே ஒழிய உண்மையில் அமெரிக்காவால் விரும்பி உருவாக்கபபட்டவை அல்ல. இதில் கிடத்த புகழ் ஒபமாவை தொடர்ந்தும் அமெரிக்க தலைவராக்க வாய்ப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

சரியான அமைப்பு, தலைமைத்துவம் இல்லாத வால் ஸ்ரீற்றை கைப்பற்றுவோம் போன்ற போராட்டங்களும் மேற்கு ஆபிரிக்க நாடுகளில் நடைபெற்ற நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இது போன்ற அமைப்பு ரீதியற்ற தலைமைத்துவம் அல்லாத மக்களின் இயல்பான எழுச்சிகளும் அமெரிக்காவை ஆட்டம் காண போதியனவான இல்லை இவை தொடரும் வரை பராக் ஒபாமாக்களும் மிட் ரோம்னிகளும் அமெரிக்காவை ஆண்டு கொண்டே இருப்பர், வெற்றி பெற்றுக் கொண்டே இருப்பர். அமெரிக்க மக்களுக்கோ அல்லது உலக மக்களுக்கோ அவர்களால் எந்நதப் பயனும் நன்மையும் ஏற்படப் போவது இல்லை. என்னைப் பொறுத்த வரையில் பராக் ஒபாமாக்களும், மிட் ரோம்னிகளும் இருவரும் அமெரிக்க தேர்தலில் தோற்க வேண்டும். இது சாத்தியமா? அதுவரை மக்கள் தோற்றுக் கொண்டுதான் இருப்பார்கள்.

### மதிலுகள்...

கொலை செய்து கோடேறி வழக்காடி சொத்தைப் பிரித்து பிரக்கிராசிமாருக்குக் கொடுத்த இனம் இது. இதற்கு தனக்கு இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் கௌரவம் முக்கியமானது. அதற்காக சொந்தச் சகோதரனுடன் ஒரே வீட்டில் வாழ முடியாமல் வீட்டுக்குள்ளே மதில் கட்டும் அளவுக்கு சகோதர பாசமும் பகுத்தறிவும் உண்டு. தன் சகோதரனோடேயே இருக்க முடியாத தமிழன் மற்ற இனங்களுடன் எப்படி ஒற்றுமையாக இருப்பான்?

இந்த இனத்தின் பெருமை உலகெங்கும் நாற வேண்டும் என்று அடியெடுத்துக் கொடுக்க, அந்த வரலாற்றுப் பெருமை மிக்க இடத்தைத் தேர்ந்தெடுத்த தேசியத் தலைவருக்கு அவரது தீர்க்கதரிசனத்தை மெச்சி, அவரது பிறந்த நாளில் கியூறியஸ் சிரம் தாழ்த்தி வணக்கம் செலுத்துகிறான்.


## Student Tutoring Center - Opening

We povide high-quality educational assistance and learning experience for students!

One-On-One Tutoring Sessions & Group Tutoring Sessions

We are extending our tutorial services to students in the Greater Toronto Area, Brampton, Mississauga, Scarborough and Markham.

Tutoring is available in the following subjects:

Math
Science
Social Studies
English /French
Biology
Chemistry
Physics
Advanced Functions
Calculus &Vectors
Data Management
Computer Studies

தமிழ் வகுப்புக்கள் Scarborough Morningside & Sheppard Avenue East இல் விரைவில் ஆரம்பமாகின்றது. தமிழ் கற்பித்தலில் அனுபவமும் தகுதியும் உள்ள ஆசிரியர்கள் புதிய கற்கை நெறிகளுடன் கூடிய பாட விதானத்துடன் தமிழ் வகுப்புக்களுக்கு தயாராய் உள்ளனர். வகுப்புகளில் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களே சேர்த்து கொள்ளப்படுவதால் ஏமாற்றத்தைத் தவிர்க்க முற்பதிவிற்கு அழையுங்கள்!

We are accepting students from Primary School level to High School level. Limited Spaces only.



For More Details
416.269.5883



## Freelance Tamil/English Interpreters & Translators

குடிவரவு சம்பந்தப்பட்ட
அகதி மனுக்கள்
பொறுப்பேற்றல்கள் (sponsors)
மனுக்கள் (appeals)
சூப்பர் விசாவுக்குரிய உதவிகளை
கனடியச் சட்டத்தரணிகளோடு இணைந்து சேவையாற்றுகின்றோம்..

Assistance Available on
PR Cards
Permanent Residence
Status Document
Citizenship
Passport/Travel Documents

சுயாதீன மொழிபெயர்ப்பாளர்கள் 416.269.5883